# ENOCH ARDEN

TENNYSON

T.820

TEN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
19 OCT 1970
LIBR...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோட் ரென்னிசன் இயற்றிய

# ஈனக் ஆடன்

திருவாளர் ச. சிவஞானசுந்தரம் அவர்களால்
ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது.



PUBLISHED BY
**S. A. VAITIALINGHAM**

(All Rights Reserved)

ST. JOSEPH'S CATHOLIC PRESS
JAFFNA
1939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
28178 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOREWORD.

REVD. S. GNANA PRAKASAR, O.M.I.,
NALLUR, JAFFNA.

I perused the late Mr. S. Sivagnana Sundaram's rendering of Lord Tennyson's Enoch Arden with delight. The story, as told by a master of the English language, is enthralling in its presentation, and remarkable for the Christian charity it breaths. The translation is not far behind its original.

Nothing helps one to improve one's style and diction so much as an endeavour to reproduce in one's own language the best that is found in the more polished languages. English writers have profited much by studying Latin classical authors, just as the latter had done by following in the footsteps of Greek authors. Early Tamil writers were indebted, in the same way, to Sanskrit literature. At the present day, however, English in its best writers stands as an accomplished model for literary productions. The translator of Enoch Arden, doubtless, felt this and he has tried to follow a great model to the best of his abilities. I wish that he has many imitators.

S. GNANA PRAKASAR, O.M.I.

15-7-39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REV. FRANCIS KINGSBURY, B. A. (MADRAS)
LECTURER IN TAMIL,
CEYLON UNIVERSITY COLLEGE.

---

This is a rendering in Tamil prose of Tennyson's ENOCH ARDEN, and is a posthumous publication. The author was a young Jaffna Tamil who was fascinated by Tennyson's story, and he desired to share his knowledge with his people who are not so fortunate as to be able to read the story in the original. All this should be borne in mind by the reader. If the work had been that of an accomplished writer, one would not meet with a few slips in language and diction, one actually sees in this work. But it is just fair to say that the author has achieved his purpose. His translation is on the whole correct, and his style simple and clear. It is sad to think that such a promising life had been cut off so early.

FRANCIS KINGSBURY.

Colombo,
March 8, 1939.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. S. ARULNANDHY, M. Sc. (LOND.)
LONDON TEACHER'S DIPLOMA.
DIVISIONAL INSPECTOR OF SCHOOLS.

8, ALFRED HOUSE AVENUE,
COLPETTY.
23 - 5 - 39.

---

ஆங்கிலத்தில் ஆதியிலெனக்கு இலக்கியச் சுவையை இனிதூட்டி இன்புறுவித்த நூல் "ஈனக் காடன்" என்னும் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த நூலேயாகும். கந்தரோடை ஆங்கிலப் பாடசாலையில் எட்டாம் வகுப்பிற் கற்றகாலத்தில் இந்நூலைப் படிக்குந் தருணம் எனக்குக் கிடைத்தது. அக்காலத்து எனக்கு வயது பதினிரண்டாயினும் நூலினது நடையும் பொருளும் என் முதிராவுளத்தைத் தானும் கவருமியல்புடையதென யான் கண்டு அதைப் பன்முறை படித்து உள்ளுருகி உடல் சிலிர்த்து நின்று உவகை கொண்டதுண்டு. சில பகுதிகள் தாமாகவே என்மனதிற் பதிந்தன. ஈனக் காடன் தன்னூருக்கு மீண்டும் வந்து இல்லம் நோக்கி யேகுவதை யெடுத்துக் கூறுமிடத்துப் புலவன்

" வீடு நோக்கிச் செல்கின்றானந்தோ! என்ன
வீடு! அவனுக்கு வீடுமுண்டா!"

என்னும் பகுதி இம்முன்னுரையை எழுதும் போதும் நினைவுக்கு வருவது மல்லாமல் பல கற்பனைபடங்களை என் மனதிலுதிக்கச் செய்து பல்வேறு மெய்ப்பாடுகளை உண்டுபண்ணுகின்றது.

இவ்வாறே திருவாளர் சிவஞான சுந்தரனையும் இந்நூல் கவர்ந்து தன்வசப்படுத்தியதென்று அவர் அதை மொழிபெயர்த்துத் தமிழுலகுக்குத் தந்த செயலால் விளங்குகின்றது. தானுண்டு சுவைத்த ஆரமுதை என்னைப்போன்று தனித்துநின்றுண்ண மனம்பொருது ஆங்கில மறியாத் தமிழன்பர்கள் யாபேருடனுங் கலந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணுதற் கெண்ணிச் செய்தவிப் பெருந் தொண்டு போற்றுதற்கும் பின்பற்றுதற்குந் தக்கது.

புலவனொருவன் இயற்றிய நூலினை மொழி பெயர்க்குமிடத்து அந்நூலின் சிறப்பெல்லாம் அமையச் செய்தல் இயலாதவொன்றாகும். எனினும், இம்மொழி பெயர்ப்பை, ஆக்கியவர் புலவரது கருத்துப் பெரும்பாலும் பங்கமுறாது நல்ல நடையில் அமையச் செய்திருக்கின்றனரென்பது என் கருத்து.

இதுவனைய இன்னும் பலவரிய தொண்டுகளைத் தமிழ்த்தாய்க் காற்றுதற் கிங்கவரில்லையென் றுள்ளுந் தொறும் என்னுளங் கரைகின்றது. அவருக்கு யாது கைம்மாறு யாமளிப்போம். இம்மொழிபெயர்ப்பை அவரது ஞாபகசின்னமாகக் கொண்டு அது தமிழ் நாடெங்கணும் பரவச் செய்தலொன்றே யானறிந்த கைம்மாறாகும்.

K. S. ARULNANDHY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THIS BOOK IS RESPECTFULLY DEDICATED

TO

CHINNAPPAH COOMARASWAMY, ESQ., C. C. S.,

in token of his keen interest

FOR THE PROMOTION OF

TAMIL LITERATURE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



C. COOMARASWAMY, C. C. S.,
DISTRICT JUDGE,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈனக்காடன்

## முகவுரை

ஈனக்காடன் என்னும் நூல், ஆங்கில பாஷையிலே செய்யுள் வடிவாகச் செய்யப்பட்டுள்ள தொன்று. அது வறிய குடும்பத்துள்ள செம்படவனொருவனது சரித்திரத்தை விரித்துக் கூறுவது. இந்நூலை உற்றுணர்ந்து வாசிப்போர் சூரிய தரிசனத்துத் தோன்றுந் தோற்றமே போலத், தம் வயமிழந்து, நூல் வயப்பட்டுச், சகல பொருள்களையும் பாட்டுடைத்தலைவனையும் பிறரையும் இந்நூல் கூறுமாறு நேரே காண்பர். இதிலே சிலபாகங்களை வாசிக்குமிடத்து, வன்னெஞ்சரேயெனினும், அவைகள், அவரைச் சோக பாஷ்பஞ் சொரியுமாறு செய்யவல்ல பான்மையையுடையனவேயாம். ஈனக்காடன் அனுபவித்த சஞ்சலங்கள், இடர்கள் பாடுகளெல்லாவற்றையும் ஒருங்கே உற்றுநோக்குவார், அரிச்சந்திர பூபதி முதலியோர்க்கு நேர்ந்த கஷ்டங்கள் யாவும் மிக எளிதேயாமென்பர். இதனை வாசிப்பார்க்குக், குடும்ப சீவியத்தை நடத்து முறைமையும், உலக இயல்பும் நன்கு புலப்படுதலே பயனுமாறுகொள்க. தமிழ் மாத்திரமே கற்றுணர்ந்த ஆடவர்க்கும், பெரும்பான்மை பெண் பாலார்க்கும் உபயோகமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு கருதி, இதனை, மொழி பெயர்ப்பன்று கருத்துப் பெயர்ப்பாமே செந்தமிழில் யாத்த தொரு புது நூலாகும் என்று எவரும் மயங்குமாறு, வீண் சொல் விரவாது புதுக்காது சிதைக்காது, பாவலர்கருதிய கருத்தினைத்தெனவறிந்தமைத்துப் (பிரதிமையென்னத்) தமிழிற் பெயர்த்தாம். அன்றித் தனிமொழியைப் பெயர்த்து யாத்த தமிழ் நூலன்றுமென்று, ஆங்கிலமுந் தமிழுஞ் செவ்வனே ஒருங்கு கற்றுணர்ந்தார்க்கே நன்கு புலப்படுமென்க.

இங்ஙனம்

யாழ்ப்பாணம் ச. சிவஞானசுந்தரன்

நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வணக்கம்

## ஆசிரியப்பா

உலகெலா மணுவி னலகிலாப் பெருமை
வாய்ந்துபே ரண்ட மாய்ந்த சிற்றணுவி
ணேரிய னாகியுஞ் சீரிய னாகி
நிறைதரு வியாபகத் துறைதரு பரம
னிணையடி மலரே துணையென வழுத்திப்
புலந்தொறு மிலங்கிய நலந்தரு மொழிகளுட்
டிறந்தரு பொருட்கட் டிறந்தி வரன்றித்
தெள்ளுபு மாந்தர்க் கள்ளுபு வீசு
மோங்கில மாகிய வாங்கில பனுவலிற்
றுயிற்றிநற் றெனிச னியற்றிய வீனக்
காடென னூலுக் கீடெனத் தமிழி [சிறி
னுண்ணிய கருத்துவ னெண்ணியாங் கொரு
தொருவர் மொழிபெயர் புருவர் வியற்றது
மெளிதர மாக்க டெளிதரற் பொருட்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவையடக்கம்

---

## ஆசிரிய விருத்தம்

வருந்தாது வசனநடை தமிழாற் செய்ய
வல்லபல புலவரெலாம் வாளா கிற்பக்
கருந்தாது விரிந்தனைய தமியே னல்ல
கற்பனைக ளமையினைக் காட னூற்குப்
பொருந்தாத மொழிபெயர்ப் பொன் றுரை
த்தே னிந்தப்
பூதலத்தாங் கிலத்தெரியார் தமக்கேயா
மாற்
றிருந்தாத மொழியிதுவென் றெள்ளா தாய்ந்து
தேர்ந்திடுக பொருணல மோர்ந்துலக
மாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோட் ரென்னிசன்

இயற்றிய

# ஈனக் ஆடன்

## நூலாசிரியர் வரலாறும் நூல்வரலாறும்:—

உலகத்திலே சிறந்தமக்களாற் பேசப்படும் பாஷை, கத்திய ரூபம் பத்திய ரூபம் என இரு திறப்படும். அவற்றுள், கற்றார் கல்லாதார் ஆகிய இருபாலாராலும் வழங்கப்பட்டு வருவது வசனவடிவாகிய கத்திய ரூபமெனவும், கற்றாரான் மாத்திரம் வழங்கப்பட்டு வருவது சந்தம் பெறச் செய்யப்படும் செய்யுள்வடிவாகிய பத்தியரூபம் எனவுங் கொள்ளப்படும். செய்யுளாவது சுவேதை மச்சை முதலிய தாதுக்கள் ஏழினாலும் ஆக்கப்படும் யாக்கைபோல எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு, என்னும் உறுப்புக்கள் ஏழினாலும், செய்யப்படும் பாட்டேயாம். செய்யுள் பாட்டு யாப்பு என்பன ஒரு பொருட் சொற்கள். சுவரூபம் பிறழாது நெட்டுருப்படுத்திவைத்துக் கோடற்கும், நிரம்பிய பொருளைச் செவ்வனே சொற்களினிறைத்து வைத்துக் கோடற்குஞ் செய்யுட்களே யின்றியமையாச் சிறப்பிற்றாயவென்னும் பெருமையனோக்கித் தென் மொழி நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவாகவே செய்யப்பட்டிருக்கின்றன. இங்ஙனமாய அரிய பெரிய நூல்களையியற்றிப் பெரும்புகழ் படைத்த நம் கீழைத் தேயத்துப் பெரும் புலவர்களைப் போலவே மேலைத்தேயத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பல ஆங்கில பாவலர் புகழ் பெற்றிருந்தார்கள். அவருள் அல்பிறெட் லோட் ரென்னிசன் என்பவரும் ஒருவரேயாம். இவர் 1809-ம் வருடத்துப் பிறந்து, 1892-ம் வருடத்து இறந்தவர். இவர் ஒரு சமஸ்தான வித்துவான் ஆதலின், இவரையறியாதார் யாண்டுமிலர். இவர் பதினெட்டாம் பிராயத்தே பத்திய ரூபமாகிய செய்யுள் நடையினாலே நூலியற்ற வல்லுநராயினர். இவர் இக்காலத்துப் புலவருட் சிரத்தானமாக விளங்கப் பெற்றுள்ள ஒருவர் என்பது, இவர் இயற்றிய நூல்களினாலும், கேம்பிறிட்ஜ் ரிறினிற்றி காலீஸிலே கல்விகற்குங் காலத்து யூனிவேர்சிற்றிச் சான்செலரின் தங்கப் பட்டயப் பரிசு பெற்றார் இவர் ஒருவரேயாதலினாலும், 1850-ம் வருடத்திறந்த வோட்ஸ்வத் புலவரினிடத்துக்கு, எமது விக்ரோறியா ராணியின் சமஸ்தான புலவராக நியமிக்கப்பட்டுள்ளாரு மிவரொருவரே யாதலினாலும், இனிது பெறப்படுகின்றது. இவர் ஆக்கிய நூல்களோ அளவிறந்தன. அவற்றுள் ஈனக் ஆடன் என்பதும் ஒன்றேயாம்.

இது வாசிப்பவரை வசீகரித் திழுத்துத் தன்வசப் படுத்தும் ஆற்றலையுடைய வர்ணனைகளும், எவர்க்கும் இயல்பாகவே இன்பம் பயக்குங் காவிய நவரசங்களும், கற்றோர் கருத்தைக் களிப்பொடு கவரச் செய்யவல்ல அலங்காரங்களும், விஷயங்கள் யாவையுங் கண்ணெதிரே காட்டுதல்போல உள்ளவாறே தெள்ளிதினுணர்த்தவல்ல பதப்பிரயோகங்களும், அருஞ்சொற்றொடர்களு மமைந்துள்ள பாவாகப் பாடப்பட்டுள்ளது. பாடி முடிக்கச் சென்றுள்ள காலமுமோ இரண்டுவாரந் தானு மில்லையேயாகும். பாவலரிருந்து பாடிய இடமுமோ சிறந்ததோர் வசந்த மண்டபமேயாகும். அதுவும், பசும்புற்றரையிற் பசுமணற் குன்றும், நன்னீர் வாவியும் நலம்புனைந் தெதிர்கொள விளங்கி வீற்றிக்குமாறமைக்கப்பட்டுள்ளதொன்று. இஃதியற்றிய வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுமோ வளம்பல பல்கும் வாவிக்கரைக்கட் டென்றல் வீசா நிற்ப நின்றலாப்போந்து, காட்சிகளனைத்தையுங் கருத்தினிதமைத்துச் சொல்லினும் பொருளினும் சுவைபட இன்பப்பாவினமாகப் பாடப்பட்டதேயாகும். இவ்வாறு வெளிவந்த இந்நூல் விரைந்து பரந்து பல்லோராலும் புகழ்ந்து மகிழ்ந்து பாராட்டி ஏற்றுக் கொள்ளப் பட்டமை 1891-ம் வருடத்து முதற் பதிப்பிலே பிரதிகள் 60,000 அச்சிடப்பட்டும் அவைமுழுவதும் மவ்வருடத்திலேயே விலைப்பட்டொழிந்தமையிற் பின்னரும் 1902-ம் வருடத்துள் ஆறு முறை பதிப்பிக்கப்பட்டதிலிருந்து நன்கு விளங்கும்.

இனி இக்கதை நான்கு காண்டங்களாக வகுக்கப்படும்.

1. அன்னிலீ என்பாளுக்கும் ஈனக் ஆடனுக்கும் நடந்த விவாகம்.

2. ஈனக் ஆடனுடைய பிரயாணமும் அதனால் அவனடைந்த இடையூறுகளும்.

3. அன்னிலீ இரண்டாந்தாரமாகப் பிலிப்பென்பவனை விவாகஞ் செய்துகொண்டது.

4. ஈனக் ஆடன் சுவ தேசத்துக்குத் திரும்பி வந்தது.

---

1. கதா நாயகனாகிய ஈனக் ஆடனிடத் தமைந்துள்ள முக்கிய குணங்களாவன :—

தைரியம், வீரம், உற்சாகம், ஈசுரபத்தி, ஊக்கம், கபடமின்மை, திடசித்தம், இன்னா செய்யாமை, கைத்தொழில்வன்மை முதலியனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிலிப் என்பவனுடைய முக்கிய குணங்களாவன :—

தாமதம், சாந்தம், தயை, பொறை, சத்தியம், சீவகாருண்ணியம், நாண், அன்பு, பிறர்க்கின்னு செய்யாமை முதலியனவாம்.

3. அன்னிலீ என்பவளுடைய முக்கிய குணங்களாவன :—

பேரழகு, அன்பு, நன்றியறிவு, மூடபத்தி முதலியனவாம்.

இவற்றை யெல்லாம் இச்சரித்திரத்து ஆண்டாண்டுக் கண்டுகொள்க.

---

## நூல்

[ஈனக் ஆடனென்னுஞ் செம்படவனின் சரித்திரங் கூறப்புகுந்த ஆசிரியர், அதனை விடுத்துக் கடற்கரைக் காட்சியையே முதற்கட் கூறுவாராயினர். என்னை காரணமெனின், கடற்கரைக் காட்சியென ஈண்டுக் கூறப்படுவது காட்சிமாத்திரையே யன்றிக் காட்சிப்பொருள்களே பின் விரிந்த கதையை ஒருவாறு தன்மாட் டடக்கியுள்ளதாகிச் செயப்படுபொருளைச் செவ்வனே விரித் துரைத்தலில் கற் சிறப்புப்பாயிரமாகக் கொண்டு, இந்நூன் முகத்தமைக்க வேண்டிற்றுய து மதுவேயாதலின் அவ்வாறமைத்தா ரென்பது.]

**கடற்கரைக்காட்சி:** இக்கடற்கரையினருகே யிருந்து காண்பான் ஒருவன் காணுங் காட்சிகளாவன :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு துறைமுகம், தொடர் தொடராக வந்து முடிவெய்துங் குன்றுகள், இங்ஙனம் முடிவுறாஉங் குன்றுகளிலொன்றினலையடித்தரித்ததனாலாய குகை, அக்குகையடியின் மஞ்சண்மணல், கடல்நுரை, சிறிது தூரத்தே செந்நிற ஓடுகளால் வேய்ந்த சில சிறு வீடுகள், அவற்றுக்கணித்தாய் அழிவெய்திப் பழுதடைந்த பழைய ஆலயம், அதிலிருந்துயர்ந்துயர்ந்தேகும் நிலம், அதற்கு மேல் கோபுரத்தை நோக்கிச் செல்லுந்தெரு, அதன் பின்னால் ஆகாசமளவுமளாவிய பசுமணற் குன்று, டேனிஷ் உடைய பிரேத கன்ன அடையாளமாம் மணற்றிடர்கள், மலைநடுவில் வள்ளம் போன்ற பள்ளத்திலே செழிப்புடனுயர்ந்து வளர்ந்து காய்த்து விதை வீழ்த்தும் பருவகாலங்களிலே, பாலியர் விளையாட்டயர வினைந் தின்புற்றனுகப் பெருங் கூட்டமான கேசல் விருக்கங்கள் ஆகிய இவைகளேயாம்.

**குழந்தைப்பருவம்:** பல வளங்களும் பல்கி விளங்கும் இக்கரையிலே நூறு வருடங்களுக்கு முன் மூன்று குடும்பத்தாரித்த மூன்று குழந்தைகளிருந்தன.

அக்குழந்தைகளுள், அன்னிலீ என்பாளொருத்தி. அவளே அத்துறைமுகத்துப் பெண் குழந்தைகளுள் வடிவான் மிக்க வனப்புவாய்ந்து விளங்குபவள். பிலிப் என்பானொருவன். அவன் ஆண்டு விளங்குந் திரிகையந்திரத்தலைவனின் ஏக புத்திரன். ஈனக் ஆடன் என்பானே மற்றையவன். இவன் ஒரு மாலுமிமைந்தன். இவன் தனது தந்தை மாரிக்காலத்துப் பெரும்புயலடியிலகப்பட்டுக் கடல் நடுவிற் கப்பலுடைய நேரிட்டமையின், மாண்டுயிர் துறக்க இளம்பராயத்திலேயே அநாதையாயினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணல்விளையாட்டு:** இம் மூவரு மொருங்கு சேர்ந்து பழந்தண்டுகள், கயிற்றுவளையங்கள், கடனீராற் கறுத்த மீன் பிடிவலைகள், கறமேளறிய நங்கூரங்கள் வள்ளங்களாகிய இவைகள் கிடக்குங்கரையிலே விளையாட்டயர்வார்கள். கடற்கரைக் கணுள்ள மஞ்சண் மணலாற் சிற்றில் இழைத்து விழைந்து விளையாட்டயர்ந்து இன்புற்றுக் காலங்கழிப்பர். கடலலை தங்கள் சிற்றிலைக் கரைத்துப் போதலையும் கற்களின் மோதி நுரையுண்டாகித் திரும்புதலையுங்கண்டு கோபித்து மீளத் திரும்பும் பொழுது அதன் பின் ஞேடுவர். பின்னர் அலையாலலைக்கப்பட்டு ஓடி மீள்வர். இங்ஙனமே எந்நாளும் அச்சிறுவர் தங்கள் சிற்றடிச் சுவடுகளை அக்கரையிற் பதிக்கப் பதிக்க அலைகளும் அழித்துக் கரைத்துக் கரைத்துக் கொண்டே வரும். அம்மலைக்குகையின் கீழ் ஈனக் என்பவனும் பிலிப் என்பவனும் தாங்கள் அமைக்குஞ் சிற்றிலை முறையே "எனது, எனது" என்றும், அன்னி என்பாளை "என்மனையாள், என்மனையாள்" என்றும், சொல்லி காடோறும் விளையாடி வருவது வழக்கமாயிற்று. ஆனல் சிலவேளையில் ஈனக் என்பவனே வீட்டுக் கதிகாரியாக ஒரு கிழமை முழுதும் இருந்து கொண்டு "இவ்வீடு எனது, என் மனையாள் இவள்" என்று அதிகாரத்தோடு கூறுவான். பிலிப் என்பவனுந் தனது முறை வந்து விட்டது என்று "என் மனைவி, என் வீடு" என்று சொல்லிச் சண்டை செய்வான். ஈனக் என்பவனே பிலிப் என்பவனிலும் பலவானதலிற், சண்டையிலும் வெற்றியடைந்து மனைக்கும் மனைவிக்கும் அதிகாரியாவான். தோல்வியெய்தினமையின் மான முந்தப்பெற்றும் என் செய்வான். கண்ணீர் சொரிந்தழுதாவது மனமாறுவான் "ஈனக்காடனே! காணுன்னேடு கோபம். என்னேடு நீ பேசலாகாது" என்பான். இதனைச் சகிக்கலாற்றது, அச்சிறுமி பிலிப்புமீ திரங்கித் தனக்காகச் சண்டை செய்யாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானமாயிருந்து வாழ்க என்றும், தான் * இருவருக்கும் சற்குணவதியாயிருப்பேன் என்றும் அழுது சமாதானங் கூறுவாள்.

**மணப்பருவம்:** அச்சிறுவர்கட்குக் கிளர்ச்சியையும் உள்ளக் குளிர்ச்சியையுங் கொடுக்கும் சூரியோதயத்தை நிகர்த்த குழந்தைப் பருவம் மாறி, வாலுளாகிய சூரியோஷ்ண கிரணத்தின் வெப்பத்தாற்றபிக்குங் காலம் வந்தெய்தியது. இருவரும் ஒரு கன்னியாகிய அந்த அன்னி என்பாளிடத்து அன்புவைத்து நேசித்து வந்தார்கள். ஈனக் என்பவன் தன்னுள்ளக் கிடைக்கையை விள்ளற்கு எள்ளளவுங் கூசிற்றிலன். பிலிப் என்பானோ அதனை வெளிவிட்டிலன். கன்னிகையும் பிலிப் என்பவனிடத்தேதான் நேசம் வைத்திருப்பதாகப் புலப்படுமாறு நடந்துவந்தாள். தன்னை அறியாதவாறு அவளுக்கு ஈனக் என்பவனிடத்தேதான் அதிகப்பிரீதி உண்டாயிற்று. வெளியாகக் கேட்டிடிலதனை மறுத்திடுவள். ஈனக் என்பான் பணஞ் சேமித்து வைத்தல் வேண்டுமென்னுஞ் சிந்தை கொண்டவனாய் நெடுநாளாகத் தன் வருவாயுட் சேகரஞ் செய்து வருவானாயினன். என்னை? அன்னியென்னுங் கன்னியைத் தான் மணம்புரியுங் காலத்து இருத்தற்கு இல்லமும், பணமீட்டற்குப் படவும், இவற்றைக் கொள்ளற்கும் ஏனைய குறைகளை நிறைவுறுத்தற்கும் பணமும், இன்றியமையாது வேண்டற்பாலனவேயாகலானென்க. மிகுந்த ஆண்மையோடு பொலிந்த அதிட்டமுள்ளவனும், வலைத்தொழிலிற் றலைமை பூண்டவனும் அபாய வேளைகளின் மிக விழிப்புள்ளவனுமான ஈனக் ஒருவனையேயன்றி, இக்குணங்களெல்லா மொருங்கமைந்து பொருந்திய வேறொருவனை

* மழலை மொழிகளால் விளையாட்டயரும் பொழுது இப்பெண் குழந்தை பிதற்றிய பேதைமொழி உண்மையாக நடந்தேறிய விந்தை மிக வியக்கற்பாலதேயாம். இது பின்னே விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY COLLEGE LIBRARY

அலையடிக்குமக்கரையிற் காண்டலரிதேயாம். அவன் ஒரு வருடகாலமாக வியாபாரக்கப்பல் ஒன்றில் வேலை செய்து கப்பலோட்டுதலிற் றீரனாயினான். கடலில் அலையாலடிபட்டு அமிழ்த்தப்பட்டுயிர்துறக்க நேரிட்ட ஒருவனை இவனே மும்முறை மீட்டுமிருக்கின்றான். இங்ஙனமாய குணஞ்செயல்களினாலே இவன் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டுள்ளானாயினான். அவன் தனக்கு வயது இருபத்தொன்று ஆகுமுன், தான் முன்னெண்ணியவாறு தன்றொழில்புரிந்து பண மீட்டப்பட வொன்றும், தேவாலயத்துக்கும் திரிகையந்திரத்துக்கும் மத்தியிலே தெருக்கரையிலே அன்னியென்னுங் கன்னிகையின் இல்லறத்துக்குரிய இல்லமொன்றுமாகிய இவற்றைச் சம்பாதித்துக் கொண்டான்.

**விவாக நிச்சயம்:**

வசந்தகாலத்துச் செக்கர் வானஞ் சிறந்து விளங்கும் ஓர் அந்திப் பொழுதிலே பெருமை சிறுமை நோக்காது, அவ்விடத்திலுள்ளோரிருவகையினரும் கேசல் விருக்க விதை பொறுக்கி விளையாட்டயரப் பெட்டி, சோழி, கூடை முதலியன கொண்டு சென்றனர். நோயுற்றமையின் தந்தைக்கு மைந்தனாகிய பிலிப்பினுதவி வேண்டப்பட்டதாதலின் அவன் ஆண்டு வருவதற்கு ஒரு மணிநேரம் தாமதிக்க வேண்டியதாயிற்று. அதன்பின் பிலிப் என்பான் மலைமேலேறி, அடர்ந்தும் ஒடுங்கியும் வளர்ந்துள்ள மரங்கணிறைந்த காட்டோரத்தில் ஈனக், அன்னியாகிய இருவரும் கை கோத்துக் கொண்டிருத்தலையும், ஈனக் உடைய பெருத்த கண்களும், காற்று மழை வெயிலடியுண்ட முகமும், ஓமாக்கினியிற் சொலிக்கும் சுவாலைபோன்று அதிற் களங்கமின்றி விளங்கும் சுத்த குணத்தையும் வெய்யோன் கான்ற கனலாற் சோதியுடன் விளங்கும் முகாரவிந்தத்தையும் கண்ணுற்றுக் கவனித்துப் பார்த்தான். அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிலும் முகத்திலும், தனக்கு லபித்த துரதிஷ்டத்தை வாசித்துணர்ந்தான். தான் அக்கன்னிகையை மணம்புரியுமெண்ணம் வீணாயிற்றேயென அறிந்தான். பின்னர் அவ்விருவருடைய போக்கும் ஒருங்கேயிருக்கவுங் கண்டான். காண்டலுந் துன்பமிகையாற் பெருமூச்செறிந்து உயிர் துறந்தான்போல் வீழ்ந்தான். பின்னர், எழுந்து செருமாற்றல் சிறிது மிலனாய் அவணகன்று மரமறைவில் மறைந்து கிடந்தான். காட்டகத்துள்ளோரனைவரும் களிப்புடன் கலாம் விளைத்து இனிதின்புற்றிருப்ப, பிலிப் என்பான் புண்பட்ட நெஞ்சோடு மனஞ் சோர்ந்து, தான் வீழ்ந்த மறைவிடத்தை விட்டெழுந்து, சீவபரியந்தம் மாறாத பசியும் தீராத ஆசையுமுள்ள மனத்தோடு திரும்பினன். ஈனக், அன்னியாகிய இருவரதன்பும் வரம்பிகந்து வளர்ந்து வரவே விவாகமுமாயிற்று.

**விவாகம் :** தேவாலயத்திலே யடிக்கப்பட்ட மணமணியின் கணகணவென்னு மோசை அத்தேசவாசிகளது செவியினுழைந்து அன்னோர் யாவரையு மின்புறச் செய்தது. ஏழு வருடகாலமாக இவ்விருவரும் இல்வாழ்க்கைக்கணின்று அளப்பரிய அதிஷ்டம் பொங்க இனிது வாழ்ந்தனர். நீதியோடு தொழில் புரிந்து நேர்மையோடு பொருளீட்டி அதனைக்கொண்டு வனப்புடன் சீவனஞ்செய்து வருநாளில், பெறுதற்கரிய பெரும் பேறாகிய மக்கட் பேறுண்டாயிற்று. முதற் பேறாக ஒரு பெண் குழந்தையுதித்தவுடன் அதனழுகைச் சப்தமுமுதித்தது. அழுத அச்சப்தத்தொனியுதித்தலும், தந்தை சிந்தையிலு மொரு சிறந்த எண்ணமுதித்தது. அது, தானுந் தன்னில்லாளுநங் கற்ற கல்வியினும் மிகையாங் கல்வியைத் தம்மின் புதல்விக்கு ஊட்டுவிக்குமாறு தானீட்டுந் திரவியத்தைத் தேட்டஞ் செய்தலாம். வருடங்களிவ்வாறிரண்டு சென்றபின், இரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாவதாக, விரிந்து மலர்ந்த * ரோஸ் விக்கிரகமன்ன அழகிய ஆண் குழந்தையொன்றவதரித்ததாதலின், அவனுளத்தவ்வாசை திரும்பவு முதிக்கலாயிற்று.

**புத்திரப்பேறு:** அக்குழந்தை, தன்றந்தை கொந்தளித்துக் கொதித்தெழுந்து அலை அலைக்குஞ் சமுத்திரத்து அதிக தூரஞ் சென்று வலைவீசி மீன் பிடிக்குந்தோறும், அவற்றைத் திரும்ப ஊர்மனைக்குட் கொடுசென்று விலை பகர்ந்து விற்குந்தோறும், தன் அன்னையாகிய அன்னி தனித்திருப்பாள் அன்றே என்றதனை இலதாகச் செய்யுமாறு கருதி வந்தவதரித்தது போலும்.

யேசுநாதர் சிலுவையிலறையுண்டிறந்த தினமாகிய சுக்கிரவாரத்திலே இறைச்சியுட்கொள்ளாது மீனருந்தி விரதமனுட்டிக்கும் வழக்குடைய கத்தோலிக்கருக்கு மீன் கொடுக்குமாறு ஈனக் ஆடன் பொருந்திக் கொண்டனனாதலின், இலையடர்ந்த சிற்றொழுங்கையிலுள்ளதும், உச்சிகளின் மீது காவலாக நிறுத்தப் பெற்ற செயற்கைச் சிங்கக் குட்டிகளோடிருபுறத்து நாட்டப்பெற்ற தம்பங்களிரண்டையுடைய வாயிலமைந்துள்ளதுமாகிய மயில் வடிவமைந்த மரஞ்செறிந்த மண்டபம் முதல் சகல சனங்கூடும் பகிரங்க சந்தையிரு கத்திரிய நேர்தலின், கடல் மணம் நாறும் பறிகள் நிரம்பிய கடற் சரக்குக்களையும், அவற்றை விற்றற் கேற்றிச் செல்லும் வெண்ணிறப் பரியினையும், காற்று மழை வெயில்களிலடிபுண்டு கறுத்த அவனது முகத்தினையும் அறியாதார் யாருமில்லை.

---

* ஈண்டு ரோஸ்மலர் விக்கிரகமென்று விதந்து கூறிய தென்கொலெனின் மென்மையும் மேன்மையும் வனப்பும் பிறவும் வாய்ந்த தன்மை நோக்குழி ரோஸ்மலர் எனவும், போற்றித் துதித்துப் புகழ்ந் தேற்றப் படுதலினானும் தன்னையின் தனிமை யென்னுங் குறையை நிறைவாக்கி விடுதலினானும் விக்கிரகமெனவும் பட்டு விளங்குதலினுமென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு காலம் பலகழிய, மனிதரும் மனித சம்பந்தமுள்ள யாவும் விகாரப்படுதல் இவ்வுலகவியல்பேயாதலின், ஒரு மாறுதலுண்டாயிற்று. அச்சிறிய துறைமுகத் துத்தரபாகத்துப் பத்து மைல் தூரத்தே பருத்த துறைமுகமொன்று தோன்றிற்று. ஆண்டுக் கடலாலும் கரையாலும் பன்முறையும் ஈனக் போய் வருவானாயினன். அவன் ஒருமுறை அத்துறை முகத்துப் பாய்மரத்துத் தாவி ஏறும் பொழுது தற்செயலாகத் தவறித் தளத்து வீழ்ந்தான். உடனே அவனூற்றார் அவற்குதவிபுரியுமாறு அவனைத் தூக்கி நிறுத்தியகாலை, அவன தவயவங்களிலொன்று முறிந்திருக்கக் கண்டனர். முறிந்த அவயவம் பொருந்தி வருமாறு மருந்து இட்டுக்கொண்டு அவன் படுக்கையிற் கிடக்கு நாளில், பீடிக்கும் பிணியுள்ள மகவொன்றை யவன் மனையாளீன்றனள். இஃதிங்ஙனமாக, இவ்வேளையில் வேறொருவன் இந்நாள்காறும் ஈனக் செய்துவந்த தொழிலை நடாத்தி வந்ததனால் இவன் மனைவி மக்கள் உண்ண உடுக்க வழியற்றவர்களாய் வருந்த நேர்ந்தது. ஈசுரபக்தி, உறுதி முதலிய சற்குணங்களமைந்த மனத்தினனாயினும், தொழிலின்மையுங் கஷ்டதெசையும் இவனுக்குத் துக்கத்தையுஞ் சந்தேகத்தையும் உதிக்கச் செய்தன. ஒருவன் நித்திரையிற் சொப்பனங்கண்டு பயத்தாற் பஞ்சேந்திரியங்களிலொன்றாவது தொழிலுறாது கிடப்ப செயற்பாலது யாதென உணரானாய் அவத்தைப் படுதல் இயல்பாமாறுபோல, ஈனக் ஆடன் தன்னில்லாள் வறுமைப் பிணியாற் பீடிக்கப் பட்டு இல்லங்கடோறும் திரிந் திரந்துண்டும், தன்மக்கள் அன்றேயுழைத்து அன்றேயுண்டும் வருந்தும் தன்மையினையெய்தும் இயல்புடையாரென எண்ணி மனம் மிகவாடி "இத் துன்பத்திருந்து அவர்களைக் காத்துக் கைவிடாது இரட்சித்துக்கொள்க! வருவது யாதேனும் அடியேற்கு வருக" என்று ஈசனைத் தோத்திரித்தான். உடனே ஈனக் முன்னே சேவித்த ஒரு வியாபாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலொன்றின் மாலுமி, அவனுக்கு நிகழ்ந்த விபத்
தைக் கேட்டுத் துன்புற்று அவனது தொழில் வலியை
யும் நற்குண நல்லொழுக்கங்களையும் நன்கறிந்து மதித்
திருந்தமையால், அவனிடத்தேகித் தனது கப்பல்
சீனு தேசஞ் செல்லவிருக்கின்றதென்றும், அதற்
கொரு மரக்கல * உபகரண விசாரணைக்காரனின் உதவி
யொன்றே வேண்டியிருக்கின்றதென்றும், அவ்வுத்தியோ
கத்தவனை யமர்வித்தலே தனதபிப்பிராயமென்றும்
கூறிப் பின்னர்ப் புறப்பட விருப்பமா என்றும், அங்
ஙனமாயின் அதற்கின்னுஞ் சிலநாட் செல்லுமென்றும்,
அதுவுமித் துறையிலிருந்தே புறப்படுமென்றும் வின
விக் கூறினன். அவ்வுத்தியோகத்தை ஒப்புக்கொள்ளச்
சம்மதமோவென்று சனக்கனை அம் மாலுமி வினய
பொழுது, அவன் அதனைத் தான் செய்த தவப்பய
னென நினைத்துச் சந்தோஷத்தோடு சம்மதமென
விடை விடுத்தான்.

பாய்மரத்தால் வீழ்ந்து படுக்கையிற் கிடந்து
நோயுற் றுழைப்பற்று வாநங்கிய அவனுடைய தீய
தசையானது, எரிந்து செல்லுஞ் சூரியன் கக்குங் கதி
ரொளியைச் சிறிது பொழுது மறைத்து, அவ்வொளி
யைப்பப்பால் † இருண்டிவில் தீபம்போல விளங்கு
மாறு விம்பிக்கும் சிறிய முகிற்படலத்தினும் நிலையற்ற
தாய்த் தோன்றிற்று. [இதில் மறைந்து கிடக்கும்
உபமான உபமேயங்களிவ்வாறுகவரியும். சனக் என்
பானுடைய தீயதசையானது சிறிது காலத்துள் அற்
றுப்போகும் பெற்றித்தாதலின், முகிற் படலத்துக்கும்,
அவனுடைய சுகவாழ்வு சூரியனுடைய பாதைக்கும்,
அவனுடைய பிற்கூற்றுச் சீவியம், அப்பாலிருண்டு
விற்றோற்றும் மேகவிம்பமாகிய ஒளித்தீபத்துக்கும் உவ
மிக்கப்பட்டவாறு காண்க.]

* ம.........ன் boatswain

† இது கரைக்கணிற்பார்க்கு அப்பால் கடற் கட்
டோன்றி விரைந்து மறைந்து செல்லு மியல்பிற்றாயதென்பது
சமுத்திர சாத்திர விற்பன்னர் அனுபவ சித்தாந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் தனது தீபதசை சூரியனை மறைத்த முகில்போல விரைவில் மாறி, அப்பாலிருண்டு வில் தோற்றும் ஒளித்தீபம் போலத் தனது பிற்காலம் பிரபையுடன் விளங்கு மென்னும் எண்ணமுடையவனே யாயினும் தான் பணத்தை யீட்டும்பொருட்டு வியாபாரக் கப்பலிற் புறப்படிற் றனது மனைவிமக்கள் யாது புரிவரென்றிரங்கிப் பின் இவ்வாறாலோசிக்கலாயினான்.

**படவை விற்கத்துணிதல்:**

"எனது படவை விற்கவேண்டி நேர்ந்ததே! அது நான் ஆசையோடு நேசித்து அருமையோடு பாராட்டி வந்த படவாயிற்றே. நான் கடனடுவில் எழுந்த புயலிலகப்பட்ட காலங்களிலெல்லாம் வலிமையோடு நின்று பொருது வென்று என்னுயிரை மீட்ட படவாயிற்றே. நான் நெடுங்காலமாகப் பயின்று வந்த அனுபவங்காரணமாக, ஒரு குதிரை வீரன் தனது குதிரையையறிந்திருக்குமாறு அருமை பெருமையறிந்துள்ள படவாயிற்றே. அங்ஙனமாயினுமிதனை விற்கவேண்டியிருக்கின்றதே! என்மனம் மிகவும் வருந்துகின்றதே! ஐயோ! யாது புரிவேன்!" என்று தன்னகத்தே கூறிப், பின்னர் ஒருவாறு மனஞ் சகித்து அதனை விற்றான். இங்ஙனம் விற்றுப் பெற்ற பணங்கொண்டு பல்வகைப் பண்டமுங் கொண்டான். தான் தூரதேயத்துச் செல்லுங் காலத்துத் தன்மனைவியாகிய அன்னி, வீட்டிலிருந்தே தான் கொண்ட பண்டங்கொண்டு வியாபாரஞ் செய்து, அதனாலடையு மூதியத்தாற் றன் குடும்பத்தைத் தான் மீளத் திரும்பி வருங்காறும் நடாத்திவரலாமென்றும், வேண்டிய வேண்டிய காலங்களிலே தான் வெளியே புறப்பட்டு வியாபாரஞ் செய்யலாமென்றும் ஈற்றிலே தான் வருந்தித் தேடிய பெருந் திரவியங்கொண்டு ஒரு பெருங் கப்பற்காரனாக வந்துவிடலா மென்றும், அது கொண்டு பெரும் பொருளீட்டி மிக்கவாறுதலோடு காலங்கழிக்கலாமென்றும், தன்னருமைக் குழந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைகளைக் கல்வியமுதூட்டி வளர்க்கலாமென்றும், பின்னர்த் தானும், மனைவி மக்களும் கவலைக்கடலைக் கடந்து கலக்கம் ஒன்றுமின்றிச் சுகானுபவத்தோடு வாழலாமென்றும் எண்ணினான். அவன் பின்னர்த் தான் செயற்பாலனவற்றைச் சிந்தித்துத் தீர்மானித்துக் கொண்டு தன்னில்லை நோக்கிச் செல்வானாயினான்.

**ஈனக் தன்னில்லம் நோக்கிச் செல்லல்**

சின்னாட்குமுன் பிறந்த நோயுற்ற சிறிய குழந்தையைப் பரிகரித்துக் கொண்டிருந்த வெளுத்த முகத்தளாய அன்னி, தனது நாயகனாகிய ஈனக் சிறிது தூரத்தே தன்னில்லம் நோக்கி வருதலைக் கண்டாள். கண்டவும் உடனெழுந்து ஆனந்த சாகரத்து ளமிழ்ந்தினவளாய்ப் பாஷ்பஞ் சொரிய கூவிக்குதித்தோடித், தான் ஈன்ற பசுங்குழவியை அவன் கையிற் கொடுக்க அவன் தன்னிருகரத்தேந்தி மகிழ்ந்த சிந்தையொடு மார்போடணைத்து அதனவயவங்களைப் பரிசித்து நிறையநிதானித்துப் பார்த்துச் சீராட்டிப் பாராட்டினான். பின்னர் அவன் தன் எண்ணத்தை அன்னிக்கு உடனே கூற ஒருப்படாதவுளத்தினனாய், மற்றை நாள் விடியற்காலை வெளிவிடுவலென் றுத்தேசித்து அங்ஙனே வெளிவிட்டான்.

**பிரயாணம் வேண்டாமென்று தன் தலைவனைத் தடை செய்தல்**

ஈனக் ஆடனுடைய தங்கவிரலாழி தன் கைவிரலணியப் பெற்ற அன்னி என்பாள் அன்று முதலின்றுவரையாவுள்ள காலத்து இத்தினத்திற்றான் தனது தலைவனினெண்ணத்துக்கு மாறாக எதிர் பேசலாயினாள். ஆயினும் ஏனையோர்போலதிக சத்தமிடாள். எதிர்த்து உரத்துக் கூவாள். பணிந்தே வேண்டுவாள். இரந்து வருந்துவாள். கண்ணீர் ஆறாகப்பெருக அழுவாள். ஒருவரையொருவர் பிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்ததேயென் றிரங்குவாள். ஏங்கித் துயர்மிக்கு இராப்பகலோயாது கலங்குவாள். சகல தீமையும் சமுத்திரத்தாற் சம்பவிப்பது சத்தியமேயாமென்பாள். வேண்டிய வேண்டிய புத்திகளையும் நியாயங்களையும் போதிப்பாள். போதித்துச் சாதித்திரந் தன்போடும் தாழ்மையோடும் வேண்டுவாள். தன்னிடத்தாதல் தன்னருமைக் குழந்தைகளிடத்தாதல் அன்புவைத்திருத்தல் சத்தியமேயாயில் போதல் ஒழிக என்று புகன்று விலக்குவாள். தூரதேய சமுத்திர பிரயாணம் கேடுவிளைக்கும் அச்சமே தன்னுயிர்த் துணைவனின் எண்ணத்துக்கு மாறாக அவளைப் பேசப்பண்ணியது. அவன் தான் புறப்படுவது தன்னயங்கருதாது தன் மனைவிமக்கள் நயமொன்று கருதியேயென்றும், அவர்களை வருந்தவிடாது குறைகளைந்து நன்னிலைப்படுத்தல் வேண்டுமென்றும் வற்புறுத்திப், பிடிவாதத்தோடு அவளது தடையாற் பயனொரு சிறிது மின்றென் றுறுதிமொழி புகன்றுந் தன்மனையா ளுடன்படாது தடுக்குமுளத்தளாகி வருந்துதலைநோக்கி அவன் மிக்க துக்கத்தோடு தன் எண்ணத்தை நிலைநிறுத்தி நினைத்தவாறு முடித்தான். பன்முறையாகத் தன்னுயிர் காத்த பழைய கடற்றுணைவனை மனவேதனையோடு விற்றுப் பெற்ற பணங்கொண்டு, முன்னாலோசித்தவாறு சரக்கு முதலிய பண்டங்கொண்டு தெருவருகிலொரு சிறிய கடையமைத்து, ஆங்கே யப் பொருள் வைத்து விற்கக்கூடிய சிற்றறைகளையும் மாடங்களையும் வெகு விசித்திரமாக வகுத்திட்டான்.

**கடையமைத்தல்**

தான் வீட்டைவிட்டுப் புறப்படுமந்நாள் வரையும் எப்பொழுதுமக் கடைவேலையையே செய்து வந்தான். அவனுபயோகித்த அரிவாள், திறப்பணம், கோடரி, சம்மட்டி முதலிய துணைக் கருவிகள் விளைக்குஞ் சப்தம், அச்சிற்றறையை அதிரச் செய்தது. அஃதன்னிக்குத் தன்னைத் தூக்கிக் கொல்லுமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தியிருக்கும் தூக்குமரச் சப்தம் போன்றிருந்தது. (பின்னர்த் தீமை விளையும் என்பதை அன்னிக்கு முன்னர் அறிவுறுத்தும் ஓர் உற்பாதத்தை யொத்திருந்ததென்பதாம்) கடவுள், பின்னர்ப் பெருத்து விரிந்து பரந்து வளரும் தூயவடிவ மரத்தின் சாரமுழுவதையும் அது இருந்து முளைத்துவரும் சிறிய வித்துள் முன்னர்ச் சூக்குமமாக அடக்கிவைத்தது போலவும், பின்னர் இதழ்களோடலர்ந்து பொலிந்து நிற்கும், புட்பங்களைச் சிறிய மொட்டுக்களுள் முன்னரடக்கி வைத்தவாறு போலவும், சனக் ஆடன் அநேக விரிந்த பொருள்களை மிகச் சாதுரியத்தோடு நெருக்கி அச் சிற்றறைக்குள் அடக்கி அடுக்கினன். எல்லாம் முடிந்தது. தனது சீவ பரியந்தம் அன்னிக்காகவென்றே பாடுபட இருக்கும் அவன் இளைத்து மேன்மாடத்தேறி விடியற்காலம் வரையும் நன்றாயுறங்கினான். தானில்லாத நாட்களினும் தன் மனைவி மக்கள் காலங்கழிக்கத்தக்க வழிகளை ஏற்படுத்தியதனால், பிரயாணத்துக்குரிய மற்றைநாட் காலையில் மிக்க தைரியத்தோடும் மகிழ்வோடும் எழுந்தனன். தனது பிரயாணங் கேட்டை விளைக்குமென்னும் அன்னியின் அச்சமானது, தன்னுயிர்த் துணைவியின் அச்சமாயிராது வேறொருவருடைய அச்சமாயிருப்பின் அஃது சனக்காடனுக்குப் பெருஞ் சிரிப்பை விளைத்திருக்கும். ஈசுர பக்தியின் வலிமையே அவனை லௌகிக பயங்களைப் பொருட்படுத்தாதவாறு செய்தது. அன்னியின் பயங்கள் எல்லாம் பயனற்றவையென்றெண்ணியுள்ளானாயினும், பிரபஞ்ச அளவைகளாகிய பாச ஞானங்களினாலே யளந்தறிதற் கரியதோர் அதீதப் பொருளாய்ப் பசு ஞானமாகிய ஆன்ம போதத்துக் கெட்டாத வராயிருப்பினும், பதி ஞானமாகிய அவருடைய அருள்கொண்டே அறியப்படத்தக்கவராயும், தம்வண்ணமாக நின்று வழிபடுவோர்க் கத்துவிதமாய்க் கலந்தருள் புரிவோராயுமுள்ள அம்முழு முதலை வணங்கித், தனக்குயாதுதான் சம்பவித்தாலும் தன் மனை மக்களுக்கு அருள் சுரக்குமாறு வேண்டினன். பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர் அவன் அவளை நோக்கி "அன்னி, கடவுளுடைய திருவருளினால் இப் பிரயாணம் எங்கள் எல்லாருக்கும் அனுகூலங் கொடுக்கும். யான் இதோ வந்துவிடுவேன். அடுப்பு நெருப்புக்களை ஆயத்தமாய் வைத்திருப்பாயாக. நீ எண்ணியிருக்கிற காலத்துக்குள் நான் திரும்பிவிடுவேன்" என்று கூறிக் கைக்குழந்தை படுத்துக் கண்ணுறங்குந் தொட்டிலை மெல்லென அசைத்து "இவ்வழகிய குழந்தை எவ்வளவாகச் சிறுத்தும் மெலிந்து மிருக்கின்றதோ, அவ்வளவதிகமாக யானு மதிலன்பு வைக்கின்றேன். கடவுளே இப்பாலகனைக் காப்பாற்றியருளும். நான் திரும்பிவந்து இக்குழந்தையை என் மடிமேல் வைத்துக்கொண்டு நான் போன தேச சமாசாரங்களைச் சொல்லிச் சந்தோஷப் படுத்துவேன். வா! அன்னி வா! * நான் புறப்பட முன் களிப்படையக் கடவாய் என்றுஞ் சொன்னான்.

**பிரியாவிடை பேசல்** னைக் தான் மீளத் திரும்புவனென்னு முறுதியுடையவனாய் இங்ஙனமாக வாக்கு மழை பொழிந்தான். பொழிதலும் அவற்றைச் செவிப்படுத்திய அன்னி சிறிதுபொழுது இடுக்கணீங்கினாள் போலாகிப் பின்னால் நற்காலம்வரு மெனும் நம்பிக்கைகொண்டனள். அவன் கல்வியறிவேறப் பெறாக் கப்பற்காரனாயினும் தன் வறிய அறிவுக்கியைய, பதி, தன்மாட்டுப் பத்திபண்ணும் பசுக்களுக்கு நன்மை பயக்கும் பேரருளுடையதே யென்றும், வேண்டுவார் வேண்டுவனதவீயுமியல்புடையதே யென்றும் பொழிந்த பிரசங்கமாரி, அவள் செவிப்புழையில் விழுந்ததேயாயினும் உண்ணுழைந் தவ ளகத்தழுந்தவில்லை யாதலிற் கேட்டும் கேட்டிலளானாள். எதுபோல வெனின் நாட்டுக் கன்னிகை யொருத்தி ஊற்று நோக்கி நன்னீர்

---

* பயணம் புறப்படும்பொழுது அழலாகாதென்பது பற்றி இங்ஙனங் கூறினான் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொள்ளக் குடங் கொடு போகுழி, அன்னவள் காதலனவனணுகி அன்பு மிகையா லவட் குதவி புரிவான் கருதித் தானே யக்குடங்கொண்டு நீர் மொண்டு கொடுக்குமன்னவன் வாராக்காலத்து அக்காதலனாற் கொள்ளை கொள்ளப்பட்ட உள்ளத்தினளாய், உயிரற்றவள் போலவுற்று வாயில் நீர் மொள்ளக் கொடு சென்ற குடத்தைத் தானே வைத்துத் தனியேநின் றயர்வுழி, நீர் பெருகி நிரம்பிவருதலை அக்குடத்துள் வளி வெளிப்புறத் தேகுதலினானெழும் ஓசை தெரித்தும், செவிப்புலனுக் கமையாமையாற் கேட்டுங் கேட்டிலளாய்க் குட நிரம்பிற்றோ வென வறியாளாகித் தேங்கிவழிந் தொழுக விடுத்தவாறு போலவென்பது.

அவள் சிறிது நேரஞ் சிந்தித்து “ஓ ஈனக் ஆடனே! நீவிர் எம்மதியுடையிராயினுமாகுக! *இனி நும்மருமைத் திருவதனம் நோக்குமமையம் அடியேற் குவந் தெய்தலில்லை என்பதனை நன்கறிந்துள்ளேன்” என்று கூறினாள். அதற்கவன், அற்றாயின் நன்று! நான் நின்முகங் காண்குவன். அன்னி! என்னை ஏற்றி ஏகும் நாவாய் இதோ செல்கின்றது பாராய்.

**பிரிவாலிரங்கும் அன்னியின் மனதை தேறச் செய்தல்**

(நாளைக் குறித்து) அந்த நாளைக்கு ஒரு தூர திருட்டிக் கண்ணாடி பெற்று என்முகத்தைப் பார்த்து நின்பயத்தை யொழிக்குதி என்று கூறினன். அப்பொழுது பிரயாணத்து முதனிமிஷத்தில், ஈனக் ஆடன் தன் மனைவியை நோக்கி, “அன்னி! என்னருமைக் கண்மணீ! துயருறுதொழி! மன மகிழ்ந்திரு! நின் மனத்தைத் தேற்றுதி! பாலரைக் கவனமாகப் பார்த்துக்கொள். நான் திரும்புமளவும் எல்லாவற்றையும் புனிதமாகவும் ஒழுங்காகவும் வைத்

* இத் தீர்க்கதரிசனமானது பின் விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. நான் போக வேண்டும் நேரமாகின்றது. எனக்காக நீ பயப்படவேண்டாம்! அதனைக் கடவுளுக்கு விண்ணப்பஞ் செய். அது வீணாகாது. அவருன்னைத் தேற்றி மகிழ்விப்பார். அவரிடத்து வைக்கும் நம்பிக்கையே உறுதியான நங்கூரம். (சீவியகாலமாகிய கடலில் மனமாகிய கப்பல், பயம், துன்பம் முதலிய புயல் காற்றுக்களிலடிபட்டு அலைபட்டுத் திகைப்புற்றுத் திசை தவறி நிற்குஞ்சமயத்தில், கடவுளைப் பிரார்த்தித்து அவரிடத்து வைக்கும் விசுவாசமாகிய நங்கூரத்தையிடு! இடின் உன் மனக்கலக்கங்கள் தீரும். சீவியமாகிய கடலைத் திடசித்தமாகிய கப்பலைக் கொண்டு கரையேறுவாய்.) நான் எவ்வளவு தூரதேசங்களுக்குப் போகினும் அங்கேயெல்லாம் அவர் இருக்கின்றாரன்றே! நான்போகு மாதவனுதிக்கு மத்திசையினும் ஆபத்தினின்றுங் காத்துரட்சிக்க ஆயத்தமாகவே யவரிருக்கின்றார். அவரிங்கும் அங்கும் எங்கும் இருக்கின்றார். அவரில்லாத இடத்திற்குப் போக முடியுமா? இந்தக்கட லவருடையது! அவருடையது!! அவரே அதனை யுண்டாக்கினவர்.

என்றிவ்வாறு கூறி எழுந்து நின்று துக்க பாரத்தால் வாடித் தூங்கி நிற்கும் தனது மனைவியைத் தன் வலிய கரத்தால் அணைத்துத்தழுவி, யாது சம்பவிக்கின்றதென்று தெரியாது திகைத்து நிற்குஞ் சிறு குழந்தைகளையும் முத்தமிட்டான். அவனுடைய நோயுற்ற மூன்றாவது குழந்தை முதனாளிரவு வருத்தத்தால் நித்திரையின்றி விழித்திருந்து விடியற்காலத்தே கண்ணுறக்கஞ் செய்தது. அதனை அன்னி நித்திரையைக் குழப்பி எழுப்பப்போகும் பொழுது ஈனக் தடை செய்து "நித்திரையைக் குழப்பாதே! எழுப்பாதே! உறங்கவிடு. பாலனிதனை யெங்ஙனமறியும்" என்று கூறித் தொட்டிலிற் கிடந்து துயிலும்பொழுதே அதனை முத்தமிட்டான். அப்பொழுது அன்னி அக்குழந்தையின் முன்நெற்றியிற் றூங்கும் சிறு மயிர்ச்சுருளில் ஒன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனை நறுக்கி அவனிடங் கொடுத்தாள். இதனைத் தன் ஆயுள் உள்ளவரையும் அவன் வைத்திருந்தான். இந்தச் சமயத்திற் பிரயாணத்துக்கு நேரமாயிற்று.

**பிரிந்து புறப்படுதல்**

இனி நிற்கமுடியா தாதலால் அவன் விரைந்து பயண மூட்டையைத் தூக்கிக் கொண்டு கை கொடுத் தசைத்து விட்டுப் புறப்பட்டான். ஈனக் குறித்த நாள் வந்தவுடன் அன்னி தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்றை இரவலாகப்பெற்று அதன் வாயிலாகப் பார்த்தாள். ஒன்றுந் தோன்றவில்லை. ஒருபோது தன் கண்ணொளிக் கிசையக் கண்ணாடியைத் திருப்பிவிட முடியாமலோ! கண் நீராற் றதும்பியபடியாலோ! கை நடுக்குற்றமையாலோ! அவள் அவனைக் கண்டுகொள்ள வியலவில்லை. கண்ணாடி அவளுக்குச் சிறிதும் பயன்படாது போய்விட்டது. அவன் தளத்தில் நின்று கையசைத்துப் பிரியாவிடை கூறிக் கப்பற் றுறைமுகத்தை விட்டகல, ஈனக் ஆடனைக் காணுதற்கு வாய்த்த காலமுமகன்றது. கண்ணொளிக்குவாக் கடையெல்லைவரையு மிமையா நாட்டத்தோ டுற்றுநோக்கி, கப்பற் பாய்மர நுனியும் பார்வைக்குக் கிட்டாதினியென்று விம்மி விம்மியழுது கண்ணீர் சொரியத் திரும்பினாள். தனது கணவன் தன்னை விட்டுப் பிரிந்தமையிற் பிரிவாற்றாது எழுந்ததுயரம் அவனிறக்குங்காலத்தெழுந் துயரமளவேயாயினும், தனது நாயகன் பிரியும்பொழுதிட்ட கட்டளையை எட்டுணையும் வழுவாது விசுவாசத்தோடு நிறைவேற்ற முயன்றனள்.

**அன்னி வியாபாரஞ் செய்து நட்டமடைதல்**

அவனேவலின்படி அவள் தொடங்கிய வியாபாரத்தில் அவளுக்குச் சித்தியுண்டாகவில்லை. வியாபாரிகளின் தந்திரோபாய அறிவு அவளனுபவத்துமில்லை. அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொள்ளவுமில்லை ஆயினும், புத்தியினாலாவது அக்குறைவை நிறைவாக்க அவளுக்கு இயலாதாயிற்று. பொய் மொழி புகன்றறியாள். எஞ்ஞான்றுஞ் சத்தியமே பேசுவாள். ஒருவாறு தான் முன்னர்க் கூட்டிக் கூறிய விலையிற் பின் சிறிது குறைத்துக் கொடுக்கும் வியாபார தந்திரமுமறியாள். இனி எனக் வருங்காலத்துத் தன்னைக் குறை கூறுவாரேனே யென்று ஏங்கி மனம் வருந்துவாள். இன்றியமையாது பணம் வேண்டுங்காற் பண்டங்கள் சிலவற்றைக் கொண்ட விலையிலும் குறைத்தே விற்றிடுவாள். அஃதவளை நட்டப்படுத்தித் துயருறச் செய்தது. இங்ஙனமாய துயரங்கள் ஒருபாலாகப், பின்னர்த் தனது பிள்ளைகளின் சீவனத்துக்கும் வழியின்றி வருந்துவாளாயினள். அங்ஙனமே யாயினுந் தனது தரித்திர நிலை பிறர்க்குப் புலனாகாதவாறு தனது துயரங்களைப் பொறுத்து அனுபவித்துத் தானே சகித்துச் சமர்த்தாகத் தன் குடும்பத்தை நடத்தி வந்தாள்.

**அன்னியுடைய கைக்குழந்தை நோய்வாய்ப் பட்டிறத்தல்**

நோயோடு பிறந்த மூன்றாம் பிள்ளையை எவ்வளவோ கிரமமாகவும் கவனமாகவும் தாய்க் குரிய தலையன்போடு அவள் பரிகரித்து வந்தபோதும் காலமுஞ் செல்லச் செல்ல நோயும் ஏறி ஏறிக் கொண்டேவந்தது. வீட்டு வேலைகள் தாயைப் பிள்ளையிலிருந்து பன்முறையும் பிரித்தமையினாலோ நோய் மூலத்தைக்கண்டு அதனை வேருடன் களையும் வைத்தியனின் யோசனை வேண்டியிருந்தமையினாலோ, நெடுநாளாக அலைத்திழுத்துப் பின்னர்ச் சிறிது நேரம் இயங்கிக் கொண்டு நின்று அன்னை யறிய முன், கூட்டிலடைத்து வைத்த குருவி திறந்தவுடன் பறந்தோடியவாறு, நன்மை தீமைக ளிவையெனப் பகுத்தறியாப் பருவக் குழந்தையின் ஆன்மா கூடு விட்டு விரைந்தோடிப் பறந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
28178

**சாவீட்டுக்குப் பிலிப்பு வருதல்**

இறந்த குழந்தையை அன்னி அடக்கஞ் செய்த அத்தினத்து, பிலிப் என்பவனுடைய களங்கமின்றி விளங்கும் மாசற்ற மனமானது அன்னிமேல் வைத்த அளவிறந்த அன்பு காரணமாக அவாவுடனவட்குற்ற துயரை நீக்குவான் கருதி, ஈனக் புறப்பட்ட அன்றுதொட்டின்றுவரையும் ஒரு நாளாவது அன்னியைக் கண்டேனில்லையே யென்றும், உதவி யற்றமையின் அவள் அனுபவித்து வருந்திய வருத்தங்கட்கு அவ்வக் காலங்களிலே சென்று தானுதவிபுரியா தொழிந்தமையே யன்றிக் கண்ணாரக் கண்டு ஆறுதலாவது கூறப்பெற்றேனுமில்லையே யென்றும் மிகவும் நொந்து வருந்திற்று. இங்ஙனே பலவாறு மனம் வருந்திய பிலிப் "உண்மையாக யான் இப்பொழுதே போய்க் காண்பேன், அஃதவட்கு ஒரு பெரும் ஆறுதலையாகும்" என்று தனக்குள்ளே கூறிக்கொண்டு புறப்படுவானாயினான். அவன் புறப்பட்டுப் போய் அவள் வீட்டினுட் புகுதாதே வாயிற்றலைக் கடைச்சென்றொரு நிமிஷ நேரம் நின்றான். பின்னர் கதவில் மும்முறை தட்டினான். தட்டியுந் திறப்பார் ஒருவரையுங் காணானாய்த் தானே கதவைத்திறந்து தனியே அறைக்குட் புகுந்தான். புகுதலும் அன்னியும், அருமையாகப் பெற்று அன்பொடு வளர்த்த தன் சிறிய குழந்தையைத் தகனஞ் செய்துவிட்டு அப்பொழுதே யவ்வறைக்குள் வந்து † துக்கத்தோடு இருந்து மனுஷமுகங்காண மனமில்லாதவளாய்ச் சுவரை நோக்கிய பார்வையோடு கண்ணீர் சொரிந்துகொண் டிருந்தாள். அப்பொழுது பிலிப் நின்றுகொண்டு "அன்னி! யானுன்னிடமிருந்து ஓர் உதவி பெறுமாறு கருதியே யீண்டு வந்தேன்" என்று நாத்தளர்ந்து கூறினான். "உய்தியில்லதோர் சஞ்சலத்தோடு துக்க சாகரத் தமிழ்ந்தி உதவியென்ற தொன்றுமின்றி ஆதரவற்றி

† துக்கமுந்தானு மெனினுமமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் ஒருத்தியாகிய என்னைப் போன்ற பெண்பாவி யினிடத்திலா உதவி பெறுமாறு வந்தீர்" என்று சோக பாஷ்பஞ் சொரிய அழுத குரலோடு கதறிக் கூறிய மறுமொழியினால், அன்னியி னகத்திருந்த ஆற் றொணுத் துயரம் அளவிடற் கெளிதாயிருந்தது. இவ்வா றவள் விடுத்த விடையினால் பிலிப் என்பவன் வெட்க முற்றான். அவ்வெட்கமு மிரக்கமு மவனகத்துப் போர் புரியத் தொடங்கின வாயின. வெட்கமவ்வில்லம் விட்டு விலகவும், இரக்க மவணகலாதுநின் றவட்குத் துணைச் செயவும் ஏவியதால் மனவேதனையுற்று, அவட்கருகிற் ருணுக விருந்து சொல்வானாயினான். "நின் தலைவனாகிய ஈனக் ஆடன் விரும்பிய கருமமொன்றைக் குறித்துப் பேச வேண்டியே வந்தேன். அவனும் நானுமாகிய இருவருள் அதிக மனோபல முடைய ஒருவனை, தான் விரும்பியவற்றை முடிக்கும் போற்றலுடையவனை, எத்தடைதான்வரினு மத்தடைகளிர்த்துத் தானினைத்த காரிய முடிக்கும் வன்மையுடையானை, நின் தலைவனா கத் தெரிந்து கொண்டனை. இங்ஙனமாய அவன் நின்னை யின்றுத் தனியே யிருத்திவிட்டுச் சென்ற காரண மென்னை! அன்னிய தேயங்களைக் காணுமவாவினாலா? சுகமனுபவித் தானந்தமுறுமாருகவா? இல்லை. இல்லை. பின் எதற்காக? தானாவது நீயாவது கற்ற கல்வியி னும் மேலாகப் பிள்ளைகட்குக் கலை யூட்டற்கு வேண்டிய பண மீட்டும் பொருட்டன்றே சென்றான்! வேறொன் றன்று. இஃதன்றோ அவனுடைய உள்ளக் கிடக்கை. அவன் திரும்பி வருங்காற் குழந்தைகளி னிளமைப் பரு வம் வாளா கழிந்தொழிந்தமையையும், பின்னர்த் தன் பிள்ளைகள் காடுமேடெல்லாம் குதிரைக் குட்டிகள் போலத் தம்மனம் போந்தவாறு, படியாத மூடராய் அலைந்து திரிதலையுங் காண்பானாயின் மனமிக வருந்தி வாடுவானன்றே! சுடுகாடு போமளவும் அவ்வருத்த மவனை விட்டகலாதே! ஆதலால், அன்னீ? இப் பொழுது நாமொருவரை யொருவர் சிறுவயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி யறிந்திருக்கின்றோமன்றோ! இப்பொழுது எனது வேண்டுதற் கிசையுமாறு நின்தலைவர் மாட்டும் புலவர்கண மாட்டும் நினக்குளதாம் அன்பினைக் கொண்டு சத்தியஞ் செய்துன்னை வேண்டுகின்றேன். நினக்குச் சித்தமேயாயின்! எனக் கிரும்பி வந்தவுடன் பிரதிப்பயனளிப்பான். அதற்குச் சந்தேகமே யில்லை, நினக்குச் சித்தமேயாயிற் சொல்லுதி. அன்னி! நான் கனவானுகவுந் தனவானுகவு மிருக்கின்றேன். ஆதலிற் பிள்ளைகளிருவரையுங் கலை பயிலுமாறு வித்தியாசாலைக் கனுப்ப உத்தரவளிப்பாயாக. இதுவே நான் நின்னைக் கேட்குமாறுத் தேசித்து வந்த காரியமென அறிகுதி. அன்னி அவரை நோக்கிய முகத்தினளாய் "அடியேன் தாம் வந்தவுடன் தமக்குச் செவ்வனே தகுந்த உபசாரஞ் செய்யாமையினுலும், அதனுலே மனம் மிக நொந்துள்ளே னுதலினுலும், தம்மருமை முகத்து நோக்கேன். தாமிவ் வில்லினுள்நுழைந்த பொழுதே என் துக்கம் என்னை அமிழ்த்திக் கொண்டது. இப்பொழுது தாம் என் மீது வைத்துளதாம் அன்பு என்னை மிக வருத்துகின்றது. ஆயின் எனக்காடரோ இறந்திட வில்லை. அஃதென் மனத்துக்கு நன்கு புலப்படுகின் றது. தமக்கவர் பிரதி பலனளித்திடுவார். பணமோ திரும்பக் கொடுபடும் தன்மையது. ஆயினத் தன்மை யதன்று தமதன்பு." எனப்பகர்ந்தாள்.

பின்னரும் பிலிப் என்பவன் அன்னியை நோக்கி "வித்தியாசாலைக்கு நினது பிள்ளைகளை யானனுப்புதல் விருப்பந்தானு?" என்று வினவினன். அப்பொழுது அவள் திரும்பி எழுந்து கண்ணீர் ததும்புந் தனது கண்களால் அவனது கிருபை சொரியு முகத்தை யொரு நிமிஷ முற்றுப்பார்த்தாள். அவன் மீது கருணை மழை பொழியுமாறு ஈசுரனைப் பிரார்த்தித்து அவனது கரத்தைப் பிடித்துக் குலுக்கித் தனது நன்றியைக் குறிப்பாற் றெரித்து அவ்வறைக் கணித்தாயுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பூஞ் சோலைக்குட் புகுந்தனள். அவனு மகக்கிளர்ச்சியுடையோனாய் அவணகன்றனன்.

**பிலிப் அன்னியின் பிள்ளைகளை வித்தியாசாலைக் கனுப்புதல்**

பின்னர் பிலிப் ஆண் பெண்ணாகிய இரு குழந்தைகளையும் வித்தியாசாலைக் கனுப்பியும், அவர்களுக்கு வேண்டிய புத்தகம் முதலிய வற்றை விலைக்கு வாங்கிக் கொடுத்தும் ஒரு தந்தை தன் மைந்தர்க் குதவுவது போல உதவி, இவ்வாறே அப்பிள்ளைகளைத் தன்னுடைப் பொருளேயாகச் செய்தான்.

பொழுது போக்காக வீண்கதை பேசிக் காலங் கழிக்கும் பிராகிருத சனங்களினால் அன்னியின் பேருக்குப் பங்கம் வருமேயென்றஞ்சி, யவளை யடிக்கடி காண்டிட லாற்றானெய்தும் மகிழ்ச்சியை யிழந்திருக்க வேண்டிய வனாய், அவள் வாயிற்படி கடந்து உட்புகாதவனாயி னான். அங்ஙனமாயினும் உபகாரக் கொடையாகத் தோட்டக் கீரைகள், கனிவருக்கங்கள், சுவரிற் படர்ந்த ரோசைக் கொடிகளினிருந் தாய்ந்த பருவமுகைகள், நாட்கொண்டமலர்கள், குழிமுயல்கள் ஆகிய இவற் றைப் பன்முறையும் அவளுடைய பிள்ளைகளிடங் கொடுத்தனுப்பி வருதலோடு தனதுயர்ந்த திரிகையந் திர மிரைந்து திரித்த மாவையும் தருமக் கொடையாக எண்ணி, அவள் மனம் வருந்தாதவாறு அதின் திறத் தைச் சோதித்தறியுமாறே கொடுக்கப்பட்ட தென்னுஞ் சாலத்துண் மறைத்து அனுப்பிவருவான்.

ஆயின் அன்னியின் ஆழ்ந்த மனத்தை அவனளந் தறிந்திலன். அவனை அவள் சந்திக்க நேருங்காலங்க ளில் மனப் பூர்த்தியும், இவ்வளவிற்றென்று வரையறை செய்ய முடியாத செய் நன்றி யறிவும் நிறைந்து தேங்கி வழிந்தமையிற், துதி சொல்லற்கேற்ற தக்க சொற்களே யின்மையால் நாவுந் தடுமாற்றமுறும். பிலிப் அவளு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய பிள்ளைகட்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருந்தான். தெருவிலே எத் தூரத்தில் எக்கோணத்தில் அவர்கள் அவனைக்கண்டாலும், அங்கே அன்போடழைக்க எதிர்கொண் டோடுவார்கள். அவனுடைய திரிகைக்கும் வீட்டிக்கும் அவர்களே உரிமையுடையர் கள்போலானார்கள். தங்கள் விளையாட்டுக் கதைகளையும் வீண்முறைப்பாடுகளையும் கவனித்துக் காது கொடுக்குமாறு வற்புறுத்தி வேண்டுவார்கள். அவன்மீது பற்றித்தாவி அவனோடுவிளையாடிக் காலங்கழிப்பார்கள். அவனைப், "பப்பாபிலிப்!" என்றழைப்பார்கள். பிள்ளைகட்கு ஈனக்கின் மீது வைத்த அன்பு தேயத் தேயப் பிலிப்பின் மீது கொண்ட அன்பே வளர்ந்து வளர்ந்தேறியது. ஈனக் என்பவன் அவர்கட்கொரு கனாக் காட்சி போலவும் தூரத்தே தோற்றும் பொய்த் தோற்றம் போலவும் தோற்றப்பட்டான். முன்னொரு முறை யாரோ ஒருவன் தங்கள் வீட்டிலிருந்து தூரதேயத்துக்குப் போயினானென்பதொன்றுமே அவர்கட்குச் சிறிது ஞாபகத்திருந்தது. சுவ ஊரை விட்டுப் புறப்பட்டுப் பத்து வருடங் கழிந்து போயும் அவனைப் பற்றி யின்னுமொரு சங்கதியுந் தெரிந்திலது. ஒரு நாட்பின்னேரம் அன்னி தன் பிள்ளைகள், காட்டுக்கு விதை பொறுக்கி விளையாடுமாறு மற்றைய பிள்ளைகளோடு போதற்கு மிக ஆசை கொண்டமையால் தானுமவர்களோடு கூடச் சேறற்கு விரும்பினாள்.

**பிள்ளைகள் விளையாடுமாறு காட்டுக்குத் தாயுடன் செல்லல்**

அப்பொழுது அவர்கள் பிலிப்பையுந் தங்களோடு கூட்டிச் செல்ல வேண்டி அவனிடஞ் சென்ற பொழுது, அவன், தேனுகரும் வண்டுகள் பூந்தாது படிந்து வெண்ணிற மடைந்தாற் போன்று திரிகையந்திரத் தெழுந்த திரிமாப் பறந்து படிந்த வெண்ணிறத் தோற்றத்தோடு நிற்கக் கண்ணுற்று "பப்பா பிலிப் எங்களோடு வாருங்கள்" என்றழைக்க அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தனன். மறுத்த பொழுதும் பிள்ளைகளவனைப் பற்றியிழுத்து வலிந் தழைத்தார்கள். அப்பொழுதவன் சிரித்து அன்னியும் அவர்கள் கூட்டத்து நின்றமையிற் பின்னரும் மறுத்துரையானாய் அவர்கள் விருப்பத்துக் கிசைந்து உடனே சென்றான். ஆயின் அன்னி மலைமீது பாதித்தூரஞ் சென்றளவில் களைத்தவளாய்ப், பறவையின் சிறகி னிறகுபோல அடர்ந்தும் ஒடுங்கியும் வளர்ந்துள்ள மாங்கனிநிறைந்த காட்டோரத்தை யடைந்தவுடன் வாடிச் சோர்ந்தனள். அந்த இடம் முன்னொரு காலத்து ஈனக் ஆடனொடு தானிருந்து சந்தோஷத்தை யனுபவித்த இடமாதலின் அஃதனை நினைவூட்டலும், அவள் தானிக் காலத்துப் படுந்துன்பத்தை யதனோடொப்பு நோக்கிப் பார்த்த மாத்திரத்தே அவசமுற்றுப் பெருமூச் செறிந்து "எனக்குக் களையாயிருத்தலாலிங்கே யிருக்க விரும்புகின்றேன்" என்றாள். பிலிப்புமவளருகிலே திருப்தியான மனத்தோடமர்ந்தான். அச்சமயத்து, இளையோ ரெல்லாம் முதியோர் கூட்டத்தை விட்டுப் பிரிந்து, ஆனந்த வசத்தராய்க் குதூகலித்துக் குரவையிட்டுத் தலைகீழாக, அகப்புறத்து வெண்ணிறத்த கேசல் விருக்க இலைகள் இருமருங்கும் நெருங்க ஊடறுத்தோடி, அங்கு மிங்குமாகக் கலைந்து, கபில நிறக் காய்க்குலைகளைப் பறித்துக் கொடுத்துதவும் விருப்பமில்லாத கொம்பர்களை முறித்தும், வளைத்தும், ஒருவரை யொருவர் கூவிக் கொண்டும் காட்டிற் கண்ட இடமெங்கும் ஓடித்திரிந் தாரவாரிப்பார். அன்னியினருகிருந்தவா றவளை மறந்து, அந்தக் காட்டகத்து அந்த இடத்தே பிலிப் காயப்பட்ட பிராணிபோல் விழுந்து மாமறைவில் தான் முன் நகர்ந்து சென்று மறைந்து கிடந்த அதனை அப்பொழுது எண்ணுவானாயினான். பின்னர் சாமுத்திரிகா சாத்திர விற்பன்னர் கவனிக்கத்தக்க நேர்மையை நேரே விளக்கு நெற்றியை நிமிர்த்தி அன்னியைப் பார்த்து, "அன்னீ! கவனிப்பாயாக. அதோ காட்டினுட் பிள்ளைகள் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமாயிருக்கின்றார்கள். நீ களைப்பெய்தினையா? அன்னி! என்று வினவ, அவளதற்கு யாதும் பேசாது மௌனமுற்றிருந்தனள். களைப்பாயிருக்கின்றதா என்று பின்னரும் வினவினன். அப்பொழுது முன்னரினு மதிக தூக்கத்தால் அவள் முகங் கையிற் சாய்ந்தது. அவள் பின்னரு மதிக துக்கத்துட் படிவதைக் கண்ணுற்றுப் பிலிப் கோபித்து, * ஈனக் புறப்பட்ட கப்பல் சேதம் போயிற்றென்றிருமுறை கூறி "இனி நீ அதைப்பற்றி எண்ணியாவதென்னை? நீ நின் கவற்சியால் நின்னையுங் கொன்று நின் பிள்ளைகளைத் தந்தையொடு தாயையு மிழக்கச் செய்து அனாதைகளாக ஆக்கிவிடாதொழி" எனப் பகர்ந்தான். அதற்கு அவள், "யானதனைக் குறித்துச் சிந்திக்கவில்லை, ஆயின், என்றே! அப்பிள்ளைகளின் சப்தம் என்னையத்துணைக் கேவலநிலையுடையேனாகச் சிந்திக்குமாறு செய்து வருத்துகின்றது. நியாயமென்னையோ தெரியவில்லை" என்று கூறினாள்.

**பிலிப் தன்னை மணம் புரியுமாறு அன்னியை குறிப்பாய் வினவுதல்**

பிலிப் இன்னு மதிகசமீபமாக அன்னிக்கு அருகே சென்று "அன்னீ! என்னகத்தொரு கருத்திருக்கின்றது அஃது எவ்வளவோ காலமாக என்னுள்ளத்தே புகுந்திருக்கின்றது. அஃதெப்பொழுதுவந் தென்னகத்து முதற் புகுந்த தென்று தெரியவில்லை. ஆயின் எங்ஙனமாவதது வெளியாகிறது. அன்னீ! 10 வருடங்களாக உன்னை விட்டுப் பிரிந்தவன் இன்னு முயிரோடிருப்பானென்று நம்புதற்கு எள்ளளவும் இடமேயில்லை. ஆதலினவ னிறந்துவிடுவானென்றே எண்ணவேண்டியிருக்கின்றது. ஆதலினால் நான் சொல்வதைக் கேட்பாயாக:

* தமிழ் நூலார் தற்குறிப் பேற்றம் என்னும் அலங்காரம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ வறுமைப்பட் டுதவியின்றி யிருத்தலைக்காண எனக்கு மிக்கவருத்தமாயிருக்கின்றது. * அல்லது நான் விரும்பியவா றுனக் குதவிசெய்ய முடியாது. பெண்கள் எவற்றையுங் குறிப்பால் விரைந்து விளங்குமாற்றலுடையரல்லர் என்றுலகங் கூறும். ஆதலின் நினக்கறிவிக்குமாறு யான் விரும்பிய திஃதென்றது ஒரு போது நினக்குந் தெரியவுங் கூடும்" என்று குறிப்பால் அவள் விளங்கிக் கொள்ளு மாற்றலுடைய ளென்னு முளத்தினனாய், சிறிது நேரந் தாமதித்தும், அவள் விளங்கிற்றிலளே யென்று அவன் குறிப்பானுணர்ந்து, வெளிப்படையாலுவது இனித் தன்னுள்ளக்கிடக்கையை உள்ளவாறவளுக்கு விள்ளற்கு ஒருவாறொருப்படுவலென் றுளங்கொண்டு கூறுவானாயினன்.

**வெளிப்படையிற் கேட்டல்**

"நின்னை யென் மனையாளாக்க யான் விரும்புகின்றேன். நீ பெற்ற பிள்ளைகட்கு நான் ஒரு பிதாவைப் போலிருப்பின் அஃதெனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். அவர்களுமென்னை யொரு பிதாவைப் போலவே நேசித்து வருகின்றார்கள் என்றெண்ணுகின்றேன். யானு மவர்களை என் பிள்ளைகள் போலவே நேசித்து வருகின்றேன். என்னை நீ மணஞ் செய்து எனக்குக் கட்டுப்பட்டிருப்பாயானால், கடவுளாலமைக்கப் பட்ட இல்லற வாழ்க்கையை நாமும், துக்கமான ஆறுதலற்ற வருடங்கள் கழிந்தொழிந்தன போக, இனிமேலாவது பெற்று வாழலாம். அதனைக் குறித்துச் சிறிதாலோசித் தறிகுதி! யானோ போதிய செல்வன். எனக்கே இனமில்லை. சனமில்லை வேறுபற்றில்லை. நின்னைக்குறித்தும் நின்பிள்ளைகளைக்

* "நீ எனக்கு மனையாளாயிருப்பின்" என்று சேர்த்து வாசித் துணர்ந்துகொள்க. இவ்வாறவ னெண்ணியிருந்தயினும் நாணமுடைமையி னவ்வாறு வெளிப்படையிற் கூறினானல்லன்.



UNIVERSITY COLLEGE
LIBRARY
4- APR 1940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து முள்ள கவலையொன்றே யன்றி எனக்குக் கவலை
பிறிதொன்றேனு மின்றேயாமெனக் கொள்ளுதி! நாமி
ருவருஞ் சிறு பாயமுதலாகச் சிநேகிதராயிருக்கின்றோ
மன்றோ! நீ யறிதற்கு வெகுகாலத்துக்கு முன்னராக
வே யான் நின்மாட் டன்புவைத்திருந்தேன்.

**அன்னி விடைகொடுத்தல்**

அன்னி அது கேட்டு "தாம் எங்
கள் குடும்பத்துக் குதவிபுரியு
மாறு தேவனாலனுப்பப்பட்ட ஒரு
பெரியவரா யிருக்கின்றீர். அகத்
தாலும் புறத்தாலு மன்பூட்டி யும்மை ஆநந்தமுறு
விக்க வல்லளாய் என்னினு மதிக சந்தோஷமான மனத்
தையுடைய சிறந்த வேறொரு கன்னிகையையே தாம்
மணஞ் செய்க எம்பெருமானருள் புரிக. ஒருத்தி இரு
வரை நேசிப்பாளா? ஒருத்தி வைக்கு முள்ளன்பானது
ஒருதரத் தொருவன்மீ தாவதே யன்றி இரண்டாந்தர
மாகப் பிறி தொருவன் மீதுஞ் செல்லத்தக்க தொன்று
குமோ? என்னன்பு ஈனக் மேலதாயிற்றே. ஆதலின்
ஈனக் என்னால் நேசிக்கப்பட்ட அவ்வளவாக நீர் நேசிக்
கப்பட மாட்டீர். ஆதலால் நீர் கேட்பது என்னையென்
பது எனக்கு விளங்கவில்லை. என்னுள்ளம் ஈனக் ஆட
னுக்குரியதாய் விட்டதே. பின்னரஃதுமக் குரியதாவ
தெங்ஙனம்" என்று தன் இனிய குரலாற் கூறினள்.
அதற்குப் பிலிப் "ஈனக் ஆடனை நேசித்த அவ்வள
வாக என்னை நீ நேசியா தொழிந்தாலும் அதிற் குறை
வாக நேசித்தாலும் நான் திருப்தி யடைவேன்," என்
றான். தனது கணவனிருக்கவும் இன்னொருவனை விவா
கஞ் செய்யலாமோ என்னு மெண்ணத்தால் பயந்து
திடுக்கிட்டாற்போற் குரலிட்டு "ஓ அருமையான
பிலிப்பே, சிறிது போது பொறுத்துக் கொள்ளும்."
ஈனக் திரும்பிவந்தால்.........ஆனால் அவர் வரமாட்
டார்.........என்றாலும், என்றாலும் ஒரு வருடம் பொ
றுத்துக்கொள்ளுவீராக. ஒருவருட மதிககாலமல்ல.
அவ்வொரு வருடத்துள்ளே ஈனக்கின் கதி எவ்வாறாயிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றென்றறிந்து விடுவேன். ஆதலால் ஒருவருட மதிக மல்ல. சற்றே பொறுத்துக் கொள்ளும்" என்று கூறி ளுள். அதனைக் கேட்ட மாத்திரத்தே பிலிப் மிக்க துயருற்றனனுய் அவளை நோக்கி: "அன்னி! எனது சீவபரியந்தம் நான் பொறுத்திருக்க வில்லையா! இன் னும் என்ன! ஒரு வருஷம் தானே! அதற்கென்ன! அது வரையுங் காத்திருக்கமாட்டேனு!" என்று கூறி ஞன். அப்பொழுது பிலிப் தன்னிற் சந்தேகங் கொண்டு கூறிஞனென்று அன்னி கண்டு" இல்லை, இல்லை, யான் வாக்குத்தானஞ் செய்தேயாயிற்று. ஆதலின் யான் கட்டுப்பட்டுள்ளேன். இனித் தாம் அதனை யுறுதி யெனக் கடைப்பிடித்தற்குத் தடையென்னை? ஒரு வருடத்திலே விவாகஞ் செய்து கொள்ளுவேன்.

**ஒரு வருடத்தில் விவாகஞ் செய்வதாக வாக்குச் செய்தல்**

யான் ஒரு வருடம் பொறுத் திருப்பது போலத் தாமும் ஒரு வருடம் பொறுத்திருக்க மாட் டீரா? "என்று பின்னரும் வற் புறுத்திக் கூற, பிலிப்பு நானும் ஒரு வருஷம் பொறுத்திருக்கின் றேன்" என்ருன். இவ்வாறு சொல்லிவிட்டு இரு வரும் யாதும் பேசாது மௌனமாயிருந்தனர். பின் னர் பிலிப்பு வானத்தை நோக்கிஞன். அப்பொழுது அவன் உயர்ந்துள்ள டேனிஷ் உடைய ககன அடை யாளமரம் பசுமணற் குன்றினின்றும் மேற்றிசை நோக்கி ஆதவனத்தமயனஞ் செய்து அடிவானத்தை யடைவதையும் அவனது கிரணத்தின் ஒளி மழுங்குவ தையும் கண்டான். கண்டதும் இனி இராக்காலஞ் சமீ பித்தததலினுலும், அதனுற் குளிரதிகப்படுமாதலினு லும் அன்னி வருத்த முறுவாளென்று பயந்து எழுந்து நின்று, நடுக்காட்டில் விளையாட் டயர்ந்துகொண்டு நிற் கும் பிள்ளைகளை அழைத்து வருமாறு தன் சப்தத்தை விடுத்தான். பிள்ளைகள் யாவரும் இவன் விடுத்த சப் தம் தங்களை யடைந்த மாத்திரத்து மூட்டைகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து மிதந்தார்கள். பின்னர் யாவருந் துறைமுக நோக்கிச் சென்றனர். அங்கே அன்னியின் வீட்டுவாயி லில் தரித்து நின்று கை கொடுத்து "அன்னீ யானுன் னோடு பேசிய பொழுது நீ மனங்களைத்துச் சோர்ந்து சித்தத் திடமிழந்தனை. ஆதலால் யானுனக்குப் பெருந் தவறு செய்து விட்டேன். யானே நின்மாட் டெந் நாளுங் கடமை பூண்டுள்ளேன். ஆயின் நீ எனக்குக் கட்டுப்பட்டவளல்லள். நினதிஷ்டப்படி செய்யலாம்" என்று கசிவாகச் சொன்னான். அப்பொழுது அன்னி என்பாள் "இல்லை, யான் வாக்குத்தானஞ் செய்தவாறு நிறைவேற்றியே தீருவேன். தவறமாட்டேன்" என் றிவ்வாறு தான் வாக்குத் தானஞ் செய்தமையையும் அதனைப் பின்னர் நிறைவேற்று முறுதியையும் அழு தழுது பலவாறு வற்புறுத்திக் கூறினாள். பின்னர் அன்னி தன் வீட்டுக்காரியங்களைத் தினமுமொழுங்காக நடத்திக் கொண்டுவந்தாள். நீயறிய முன்னரேயே உன்னி லாசைப்பட்டேனென்று பிலிப்புச் சொல்லி ஒரு கணப்பொழுது நேரந்தான் சென்றதென்று அன்னி எண்ணிக்கொண்டிருக்க, ஒரு வருடங் கழிந் தொழிந்தது. ஒரு கனிக்காலம் மாறி மற்றைக்கனிக் காலம் வந்து விட்டது. வருட மொன்று கழிதலும் அன்னியின் முன் பிலிப்புத்தோன்றி முன்செய்த வாக் குத்தானத்தை நிறைவேற்றுமாறு ஞாபகப்படுத்தினான். அதற்கவள் "ஒரு வருடமாய் விட்டதா" என்றாள். அவன், மரங்கள் மற்றமுறையும் பழுத்து விட்டனவா என்று வெளிப்புறத்தே வந்து நோக்குதி என்றான். அவளின்னுஞ் சிறிது காலத்தைப் போக்க வேண்டு மென்னுங் கருத்துடையளாய் "இஃது ஒரு கவனிக் கப்பட வேண்டிய விசேஷ விஷயமாதலினாலும், ஆழ்ந்த யோசனையை வேண்டியுள்ளதாதலினாலும், அவையன்றி எனது சீவிய காலத்தொரு பெருமாறுதலை யுண்டுபண் ணுவதாதலினாலும் இன்னு மொரு மாசத்துக்குப் பொறுத்திருப்பீராக என்றும், இப் பெண்பேதைக்காக ஒரு மாதம் இரங்கிக் காத்திருக்கக் கூடாதா என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குறுதி செய்து கொண்ட பிரகாரம் நான் கட்டுப் பட்டுள்ளேன் என்றும்" இன்னும் ஒரு மாதம்தா னுள்ளது என்றும், அதற்குமேலே இனிப் பொறுத்திருக்குமாறு தான் கேட்கவில்லை என்றும் வருந்திக் கூறினுள். ஒன்றின் பின் ஒன்ருய் அநேக பொய்ப் போக்குக்களைச் சொல்லித் தாமதஞ் செய்து கொண்டு வருதலைப் பிலிப்பு கண்டு, குடித்துத் தன்னறி வழிந்து வெறிவழிப் பட்டவனது கைபோல நடுங்கியகையுஞ் சப்தத்தோடும், நெடுநாட் சோற்றைக் காணுத பசியுடையோன் அதனைப் பார்ப்பது போல அவளைப்பார்த்து, "அன்னி! நீ நினது வசதியான காலத்தைத் தெரிந்து கொள்ளுதி. இசைவு போலப் பார்" என்றிவ்வாறு கூறினுன். அன்னி அவனிலிரங்கி அழுது நம்பக்கூடாத அநேக சாக்குப் போக்குக்களைச் சொல்லிச் சொல்லித் தாமதஞ் செய்து அவனுடைய பொறுமை சத்தியம் முதலிய சற்குணங்களை இன்னுமோ ராறு மாத காலமாகச் சோதித்து வந்தனள். அச்சோதனையால், தன்னையன்றி வேறொரு பெண்ணையும் அவனிச்சித்திருக்கவில்லை என்பதனையும் இவ்வளவுகாலமாகத் தான் தாமதஞ்செய்தும் தன்னை வெறுத்து விட்டு விலகாமையால் அவன் தன்னிடத்தே வைத்த நேசமும் விசுவாசமும் உண்மைதானென்பதனையும் நன்றே யறிந்துகொண்டனள்.

இவ்வாறிவள் தாமதஞ் செய்து வருநாளில் அத்துறைமுக வாசிகளுள் ஊர்க்கதை பேசிக் களிக்கும் கிராமியச் சோம்பலாளர்கள், பிலிப்பும் அன்னியும் விவாகஞ் செய்து கொள்வார்களென்று காத்திருந்த தங்கள் எண்ணம் நிறைவேருது தவறி விட்டமையினெழுந்த வெறுப்பினுல், தங்கட்குச் சீர் தீங்கு செய்தார்போ லவர்களை வைது கோபிக்கத் தொடங்கினுர்கள். அவர்களுள், அன்னியை விவாகஞ் செய்யப் பிலிப்புவுக்கு விருப்பமில்லை யென்றும் அதனு லவன் அவள்மீ ததிக வாஞ்சைவைத்து நடக்கவில்லை என்றும் பேசிக்கொள்வார் சிலர். அவள் அவனை யகப்படுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு கருதியமையின், தான் தூரத்தூர நின்று
பாசாங்கு செய்து வருகின்றான் என்பார் வேறு சிலர்.
அவளு மவனுந் தத்தம் விருப்ப மின்னதென் றுணர்ந்
தறியு மாற்றலில்லாத மந்த மதியினர் என்று சிரித்துப்
பரிகசித்து நகையாடுவார் வேறுசிலர். இன்னோர்யாரி
னுங் கேடுபுரிதலின் மேம்பட்ட ஒரு துட்டன், சர்ப்ப
மிட்ட முட்டைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஒட்டி
யுள்ளவாறு உலகிலுள்ள தீமைகள் யாவுந் திரண்டோ
ருருவெடுத்தாற்போன் றுள்ளவன். அவன் பிலிப்பு
அன்னியாகிய இருவருக்கு மிடையிலுளதாம் சம்பந்தம்
துன்மார்க்கமான தென்று களின நகையால் பிறர்க்
குணர்த்துவான். அன்னியுடைய மகன், தனது தாய்
பிலிப்பை விவாகஞ்செய்தல் தனக்கும் விருப்பமேயென்
பதனை வெளிப்படையாற் பேசாது பார்வைக் குறிப்பி
னால் உணர்த்தினான். ஆனா லவளுடைய மகள் தனது
தாயார் பிலிப்பை விவாகஞ் செய்து தங்கள் குடும்பத்
தை வறுமைப் பிணியினின்று நீக்கி விடுமாறு தயை
செய்யும்படி அவளை வெளிப்பட நெருக்கி வருவாள்.
பிலிப்பினது ரோசைமலர் போலும் முகமானது கவலை
மிகுதியால் வாடிச் சுருங்கித் தனக்குள்ள காந்தியையும்
பேரழகையு மிழந்தது. இவையெல்லாம் அன்னியை
மிகவுந் தூற்றுவனபோன் றிருந்தன. இவற்றிற் கெல்
லாங் காரணம் தானேயாமென்று அன்னி நினைப்பாள்.

பின்னரோரிரவு அன்னிக்கு நித்திரை வாராமை
யால் அவள் தனது ஈனக் இறந்து விட்டாரா அன்று
என்று தனக்குக் குறிப்பாலுணர்த்துமாறு வேணவா
வோடு ஈசனைப் பிரார்த்தனை செய்தாள். இராக்காலத்
துக் கண்ணொளி யூடுசெல்லாத கனையிருட் சுவராற்
சூழப்பட்டுப் பயமுற்று அதனைத் தாங்க முடியாது
படுக்கை விட்டுத் திடுக்கிட்டெழுந்து தீபமேற்றி,
பைபிளை எடுத்துக் கண்மூடிக் கொண்டு கயிறுசாத்தித்
திறந்து கைவிரலாற் றொட்டுத் தொடுபட்ட வரியை
வாசித்துப் பார்த்தபோது "பனையின் கீழ்" என்றிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அதினர்த்தமே யவட்குப் புலப்படவில்லை. ஆதலி னவளதனை மூடிவைத்துவிட்டு நித்திரை போனாள். அவ்வேளையில் * இதே ஈனாக் ஆடன் சூரியனுச்சியிற் பிரகாசிக்க ஓர் உயர்ந்த பனையின் கீழ் இருப்பதாக ஒரு சொப்பனங் கண்டாள்.

**அன்னி சொப்பனங் காணுதல்**

அன்னி தேவபக்தியுடையாளாதலினாலும், ஈனாக் உயிரோடிருக்கின்றானோ அன்றோ என்பதனைக் குறிப்பா லுணர்த்தும்படி பிரார்த்தித்துச் சயனித்தவுடன் கண்ட சொப்பன மாதலினாலும், தான் வேண்டிய வேண்டுகோட்கு விடுத்த விடையேயாமென அதனை விளங்கி "ஈனாக் இறந்து விட்டனன், அவனிப்பொழுது பேரா நந்தப் பெரு வாழ்வோடிருக்கின்றான், பரலோகத்துத் தேவசபைக் கண்ணே தோத்திரங்கள் பாடித் துதித்துக் கொண்டிருக்கின்றான்" என்றிவ்வாறாக சொப்பனார்த்தஞ் செய்து கொண்டாள். உடனே நித்திரை விட்டெழுந்து அவனிறந்து விட்டானென்றும், இனி பிலிப்பை விவாகஞ் செய்யலாமென்றுந் தீர்மானித்து, பிலிப்பைத் தனதில்லிற் கழைத்து இனி நாமிருவரும் விவாகஞ் செய்யா திருப்பதற்கு நியாய மென்னை ? என்று மிக்க ஆவேசத்தோடு கூறினாள். அதற்குப் பிலிப்பு "தேவனுக்குப் பிரீதியாயும் எமக்கு நன்மையாயு மிருக்குமாதலின் உனக்கு விருப்பமானால் நீ என்னை விவாகஞ் செய்து கொள்ளலாம். காலதாமதமின்றி உடனே அது நடைபெறுவதாக" என்றான்.

**அன்னியின் 2-வது விவாகம்**

இங்ஙனமேயாக இவ்விருவரும் விவாகஞ் செய்து கொண்டனர். முன்போல மண மணிகள் கணகணென்றடித்தன. கணகணென்

* இச் சொப்பனஞ் சரியாயிருந்ததைப் பின் இச்சரித்திரத்துப் படித்துக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடித்து மென்னே! மணமகள் மனமோ படபடென் றடித்தது. அவளுக்குப்பின்னே ஒருவர் நடந்து வருவதாக அடிச்சப்தத் தொனியொன் றவட்குக் கேட்பது போன்றிருக்கும். அஃதியாண்டிருந் துண்டாவதென் றவளறியாள். அவை செவிப்புலைழக் கணிரகசியமொழி பெய்வது போன்றிருக்கும், அஃதென்னே யென்றறியாள். அவள் தன்னில்லிற் றன்னந்தனியே யிருக்கவும் விரும்பாள். வெளியே புறப்படவும் பயப்படுவாள். இவ்வாறாக அவளைக் காரணந் தெரியாக் காரியங்கள் முடிவின்றி வருத்துவன வாயின. வீட்டறைக்குட் போகப் போய்த் திடுக்கிட்டு வாயிலினின் றாலோசித்துக் கதவுப் பூட்டுக் குழியில் கையை வைத்துப் பதறுவாள். பிலிப்பு இவற்றின் காரணந் தனக்குத் தெரியுமென எண்ணியிருந்தான். அதுதான் அவள்போலக் கருப்பந் தரித்திருக்கும் நிலையுடையார்க்கு அங்ஙனமாய அயிர்ப் பச்சமுதலியன இருத்தலியல்பே யென்பது. இப்படியிருக்கும்போது குழந்தையும் பிறந்தது. அங்ஙனம் புதியதாய்ப் பிறந்த பிள்ளையைப் போலப் புதியதாகத் தனது சீவியகாலத்தையும் எண்ணிக்கழிக்கத் தொடங்கினள். அதுபோலத் தனது துயரங்களையும் மெல்ல மெல்ல மறைத்தொழித்தனள். அக்குழந்தை தனது அன்னையின் முழுமனத்தையுங் கவர்ந்து அவளுடைய பூர்வ சீவியகாலத்தை முற்றாக மறக்கச்செய்து, தன்னைப் போலவே அவள் தனக்கும் புதிதாகச் சீவியகாலந் தொடங்கியிருக்கின்றதாயவளை யெண்ணி நடக்குமாறு செய்தது. பின்னர் அவளுடைய நல்ல பிலிப்பு அவளுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயினன். அவளை முன்னர்ப் பயமுறுத்திய தோற்றங்கள் எல்லாம் முற்றும் அற்றுப்போயின.

இஃதிவ்வளவில் நிற்க:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈனக் ஆடனின் கடற்பிரயாணம்**

ஈனக் எங்கே போயினான். அவன் பாடு யாதாய் முடிந்தது அவன் ஏறிச் சென்ற † "நல்யோக புரவி" என்னும் கப்பலின் பிரயாணம் வாய்ப்புடைத்தாயிற்று. அஃது இங்கிலாந்தைவிட் டகன்று கடற் பிரயாணிகட் கிடர்விளைக்கு மியல்பினையுடைய புயற்கடலாகிய பிஸ்கே குடாக்கடலை யடைந்து, பெருத்துப் புரண்டுருண்டு வரும் நீண்ட அலையால் அலைப்புண்டு, கீழ்த்திசை நோக்கி ஒன்றன்பின்னொன்றாய் மலைத்தொடர்போல் எழுந்துவரும் பெருமலைகளோ டெழுந்தசைந்து கவிழ்த்துக் கொட்டி விடத்தக்கதாகப் பின்விழுந்தும், சிறிது தூரஞ் சென்றாலும் பேரபாயமின்றி மெதுவாக ஓடியும், கோளமத்தியிலுள்ள உஷ்ணமண்டலத்தை யடைந்து தாண்டியும், நெடுநேரமாக அடிகாற்றிலடிபட் டகப்பட்டுப் பெரும் புயற்குப் பெயர்பெற்ற நன்னம்பிக்கை முனையை நாடியும், காற்றானது தீவிரமாகவும் சாந்தமாகவும் அடித்தலி னிடையிடையே காலநிலை உடன்பாடாகவும் பேதமுறவும் ஆபிரிக்காவைத் தென்பாகமாகச் சுற்றிக் கீழ்நோக்கிச் சென்று பின்னரும் உஷ்ணமண்டலத்தை யடைந்து அதனைக் கடந்து சென்றும், இடையறாது பருவக்காற்றுப் பெயர்ந்தடித் தமையிற் பொன்மயமாய் விளங்கும் ஆர்க்கிப் பெலகோ தீவுகளி னருகாற் சென்று சீனா தேயத் தொருதுறை முகத்து வந்து சேர்ந்தது.

**சீனாதேசத்தை யடைந்து வியாபாரஞ் செய்தல்**

அங்கே ஈனக் ஆடன் சீனாவில் தானாக வியாபாரஞ் செய்வானாயினான். வியாபாரத்தின் பொருட்டு அக்காலத்து வேண்டியனவாய் விலையுயர்ந்தனவாயுள்ள நவீன உருவங்களையும், தனது

† "Good Fortune" "நல் யோகம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகட்காகப் பொன்மயமான யாளி ஒன்றையும் வாங்கினான். அவன் இங்கிலாந்துக்குத் திரும்பிய பொழுது அவனுடைய பிரயாணம் அவனுடைய உயிருக்கே மோசம் விளைக்கத்தக்கதாயிருந்தது. அக்கப்பல் புறப்பட்ட தினமுதல் பலநாளாக அடிவானமே தோன்றித் தோன்றி அசைவதிகமின்றி யிருந்தமையிற், தன் முன்னணியத்திற் பூரித்தமார்போடும் பூரண முகத்தோடும் பொலிந்திருந்து விளங்குமா றமைக்கப்பட்ட அழகிய பெண்ணுருவானது, சிறகுகளினிறகுகள் அடியிலொடுங்கி, முடியில் விரிந்துள்ள வாறு, கப்பலின் முன்னணியத்தின் கீழ்ப்புறத் தடித்துப் பிரிந்து விரிந்து செல்லும் அலையை உற்று நோக்கிக்கொண் டிருந்தாற்போன் றிருந்தது. பின்னர் மந்தமாருதமும், அதன் பின்னர் ஒருகா லேறியும் மறுகா லிறங்கியும் வீசுமொரு நிலையிலமையாத மாருதமும், ஈற்றில் நெடுநேரமாக எதிர்காற்றுமாக வீசிக் கப்பலை அலைத்தலைத்திரிய முடிவிலே ஒரு பெரும் புயலடித்துப் பேரிருளால் திசை தெரியாததனை யிழுத்துச்சென்றது.

**திரும்புகையில் கடனடுவில் புயலடிக்கக் கப்பலுடைதல்**

அங்ஙனஞ் செல்லுகையில் "கற்பார், கற்பார், என்று கப்பற்காரர் சப்தஞ் செய்தனர். இவ்வா றிவர்கள் சத்தமிடலும், அக்கப்பலானது ஒரு பெருஞ் சத்தத்தோடு கற்பாரில் நொறுங்கிச் சேதமுறுமா றடித்தது. இக் கப்பற்சேதத்தினால் ஈனக்கையும் இன்னு மிருவரையுந்தவிர ஏனையோர் யாவரும் மாண்டுயிர் துறந்தார்கள். கப்ப லுடைந்ததால் கிடந்து மிதந்த கயிற்று வளையங்களையும் முறிந்த பாய்மரங்களையும் தாவிப்பிடித்துப் பாதியிராவரையும் ஈனக்கும் மற்றிருவரும் நீரில் மிதந்து காற்றினாலும் நீரிழுவையினாலுந் தள்ளி ஓதுக்கப்பட்டு, மனித சஞ்சாரமொன்றின்றி மற்றைய வளப்பங்களாற் குறைவற நிறைந்துள்ளதுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்த கடலிற் றனித்துள்ளதுமான ஒரு தீவாந்தரத்தின் கரையோரத்தை யடைந்தார்கள்.

**ஈனக்காடனும் வேறிருவரும் ஒரு தீவுக்கரையி லடைதல்**

அத்தீவு மனித சீவியத்துக்கு வேண்டிய யாவும் குறைவின்றி நிறைந்துள்ளது. பலவேறுவகைப்பட்ட காய்கனி கிழங்கு வருக்கங்கள் ஆண்டளவுகடந் துள்ளன. தங்கட் கபாயம் நேரிடுமென்றெள்ளளவு மெண்ணாது பயமென்பதொருசிறிதுமின்றிச் சுத்த மனத்தோடு கிட்டவந்துலாவும் மிருகங்களைப் பிடித்துக் கொல்லுதல் மிக எளிதாக இருந்த போதினும், தங்களைக் காத்துக்கொள்ள வழியறியாத அம்மிருகங்களைக் கொல்லுதல் சீவகாருண்ணியமன் றென்பதொன்றனையே அங்ஙனம் அவர்கள் செய்யாது விடுத்தனர். ஆங்கியற்கையாயுள்ள மலைக்குகை யோடு சேர்த்துக் கடலேணைக்கி யொரு குடிசையமைத்துப், பனையோலைகளினலதனை வேய்ந்து அதன் கணிருந்து வாழ்ந்தனர். சகல வளங்களையுங் குறையாது நல்குங் கற்பகதருச்செறிந்த உசிதமான பூங்காவனத்தை நிகர்த்த இத்தீவில், இவ்வா றிம்மூவரும் என்றும் மாறாத நித்திய வசந்த காலத்தில் மனத்திருப்தி யொன்றில்லாமையே யன்றி வேறொரு குறையு மின்றி வாழ்ந்திருந்தார்கள். அம்மூவரி லிளையவன் சிறு பையனாதலிற் சடுதியாகச் சம்பவித்த கப்பற் சேதத்திற் காயப்பட்டு ஐந்து வருடகாலமாக இயங்கிக்கொண்டு கிடந்தமையின் மற்றிருவரும் அவனை விட்டுவிலக முடியாதிருந்து அவனிறந்த பின் எஞ்சிய இருவரும் விழுந்து கிடந்த மரமொன்றைக் கண்டனர். ஈனக்கின் தோழன் தன்னுயிரைப் பொருட்படுத்தாது அம்மரத்துண்டின் உட்புறத்தை ஆயுதமின்மையின், இந்தியரைப்போல் நெருப்பினாலெரித்துச் சிறிய வள்ளமொன்றைச் செய்யும் பொழுது *சூரிய கிரணம் சுட்டிறந்துவிட ஈனக் ஒருவனே தனி

---

* Sunstroke.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யே யிருந்தான். அவ்விருமரணத்தையும் பொறுத்திரு எனக் கடவுள் தனக்குக் கட்டளை செய்வதாக உணர்ந்தான்.

**தீவுச் சிறப்பு** சிகரம் வரையும் மரஞ் செடி வளர்ந்து மூடியுள்ள மலைகள், மரஞ்சூழ்ந்த வெறு நிலங்கள் நெளிந்து வளைந்து மேலுலகத்துக்குச் செல்லும் வழி போலத் தோன்றும் மரவரிசைகளை இருமருங்குங் கொண்ட வெளிகள், தலையிற் சூடிய முடியென்னக் கீழ் நோக்கித் தூங்கு மிறகுபோன்ற பச்சிலைகளையுடைய மெலிந்துயர்ந்த தென்னைகள் † மின்னனைய பட்சிகள், சிறிய செந்துக்கள், உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் விருட்சங்களினடியைச் சுற்றிக்கொண்டும், அத்தீவின் முடிவெல்லைவரையும் படர்ந்து நிலத்தை மூடிக்கொண்டு முள்ள கொடிகளின் காந்தி, ஆகிய இவற்றோடு பறவைகள் சிறிய செந்துக்கள், இவற்றினசைவினெழும் மின்னொளி பூமிதேவியின் ஒட்டியாணம் போல விளங்கும் உஷ்ண மண்டலத்தின் வர்ணனைக் கடங்காப் பிரபல வளங்கள் ஆகிய இவைகள் யாவையு மவன் கண்ணுற்றான். கண்ணுற்றும் என்னை! அவனுக்குச் சந்தோஷமேயில்லை. அக்காட்சி யவனுக்குச் சுற்றத்தைப் பிரிந்திருத்தலி லுண்டாய துயரத்தையே மேலு மதிகப்படுத்திற்று. பல வளங்களும் பல்கிவிளங்கு மத்தீவின் வனப்பினுல் அவனடையு மானந்தத்திலும், தான் கண்ட மாத்திரத்தே களிப்பை நல்கும் மானிடமுகத்தை ஆண்டுக்கண்டாவது அவர தினிய சப்தத்தைக்கேட்டாவ திருப்பானுயின் மிக மேலாகிய ஆநந்தத்தைப் பெற்றிருப்பான். ஆனலாகா

---

† மண்டு மின்னனைய பட்சிகள் என்றது அவைபறக்கும் விரைவைக் குறித்தற்கும் அவற்றின் சிறகினொளியைக் குறித்தற்கும் சிலேடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்து வட்டமிட்டுலாவும் கணக்கற்ற கடற்பட்சிகளின் சத்தமும், கரைக்க ணுள்ள கற்பாரிலே நீடித்த அலைகள் இடி இடித்தாற்போ லடித்து மோதுஞ் சத்தமும், ஆகாயமளவு முயர்ந்து வளர்ந்து கொம்பர்கள் செறிந்து புட்பித்திருக்கும் விருக்கங்கள் ஒன்றோடொன்று *ரகசியம் பேசுஞ் சப்தமும், கரை வழியாக அவனலைந்து திரியும் பொழுதெல்லாம் உயர விருந்து குதித்துப் பாய்ந்தோடி வருஞ் சிற்றருவிகள் அலையெறியுஞ் சமுத்திரத்துட் சலசலெனப்பாயும் பாய்ச்சலினிரைச்சலு மாகிய இவைகளே அவன் செவிப் படுவனவாயின. கப்பலுடையக் கரையடைந்து பெரிதும் மெலிந்த கடலோடிக்கு, கப்பல் வருகின்றதோ தெரிகின்றதோ என்றெதிர் நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்ப தியல்பாதலின், இவனும் பகல் முழுதும் மலைக்குன்றுகளிலேறிக் கடலையே நோக்கிக் கொண்டிருப்பான். பகல் பகலாகப் பலநாட் கழிந்துங் கப்பலொன்று மவன் கண்ணுக் ககப்படவேயில்லை. விடியற் காலத் துதயஞ் செய்யும் சூரிய ஒளி, பனை தென்னை முதலிய மரங்கள் மலைகள் குன்றுகள் ஆகிய இவற்றில் விழுந்து முரிந்து அம்மரங்களி னிடை வெளிகளால் செந்நிறக்கிரண பாணங்கள் பாய்வனபோ னுழைதலையும், கீழைச் சமுத்திர நீர் செந்தழ னிறமடைதலையும், மத்தியானத்துச்சியை ஆதவனடைதலையும், அத்தமயனகாலத்து மேலைச் சமுத்திர நீர் சூரிய கிரண ஒளியின் செந்நிறத்தைக் கவர்ந்து காட்டுதலையும் பெரிய தாரகைகளெல்லாம் ஆகாயத்துத் திரள் திரளாகச் சேர்ந்து ஒளிகாலுதலையும், பகற் காலத்திலும் இராக் காலத்து உலக மொடுங்கிக் கிடத்தலி னமைதியதிக முடைத்தேயாக, அலை ஒருங்கு சேர்ந்து திரண்டுருண்டுயர்ந் தெழுந்து விழுந்துடைதலினு லுண்டாகும்

---

* ஆண்டுள விருக்கங்களிற் கடற் காற்றுப்படுதலி னவற்றி னிலைகள் அசைய ஒருவகைச் சப்தமுண்டுபடுமன்றே. அதனையே ஈண்டு ரகசியம் என்று சிறப்பித்துக் கூறினோ ரென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய ஆரவாரத்தையும், பின்னர்ப் பரிதியின் எரிந்து
செல்லும் பாணம்போன்ற மூரிந்த கிரணங்கள் காலையி
லுதித்தலையுமே தினந்தினந் தவறாது கண்டும் கேட்டும்
வந்தமையேயன்றிக் கப்பலொன்றையுங் காணப்பெற்றி
லன். எந்நாளும் வழக்கம் போலக் கப்பல் வருதலையே
பார்த்துக் கொண்டு கடனோக்கி மலைக்குன்றுகளி லசை
வற்றிருப்பான். அதனாலவனை ஓர் அசரப்பொரு
ளென் றெண்ணிப் பொன்னிறப் பல்லிகளும் அவன்மே
னியிற் பயமின்றி நகர்ந்து செல்லா நின்றன. மன
விசாரத்தினாலுந் தனிமையினாலும் உருவெளித் தோற்
றங்கள் அவனகக் கண்ணுக்குத் தோன்றுவனவாயின.
ஒளியுள்ள நிரட்சரேகைக் கப்பாலுள்ள பனி முதலிய
வற்றா லிருளடைந்து தோன்று மிங்கிலாந்தாகிய தீவிலே
தானத்தோற்றப் பொருள்களுக்குஞ் சனங்களுக்கு
மிடையே உலாவுவதாகவும் அவை தன் முன்னே
தோன்றுவனவாகவும் அவனுக்குப் புலப்பட்டது. அத்
தோற்றங்களாவன :—குழந்தைகள், அன்னோர் மழலை
மொழிகள், அன்னி, சிறிய வீடு, உயர்ந்தேறிச் செல்
லும் தெரு, திரிகையந்திரம், இலை செடிகளிருமருங்
கும் நெருங்கியுள்ள ஒழுங்கைகள், மயில் வடிவாக உரு
வப்படுத்தி வளர விடப்பட்ட இயூ மரம், தனி மண்ட
பம், மீன்வண்டி யிழுத்த குதிரை, தான் விற்ற படவு,
குளிரையுடைய கார்த்திகைமாத விடியற்காலம், பனிப்
புகை மூடியதாலிருண்டு தோன்றும் மணற் குன்றுகள்,
மென்மையாகத் தூறும் மழை, மரங்களுதிர்த்திய
இலைகள் கிடந்து பழுதடைந்தமையின் அவற்றிலிருந்
தெழும் காற்றின் நாற்றம், ஈய நிறத்த கடலின் அடங்கி
யெழு மலை யொலியாகிய இவைகளேயாம். இவைகளே
யன்றித் தானிருந்த கோவிற்பற்றிலுள்ள * மணிகளின்
பேரொலி மங்கல ஒலியேயாதிகள் தூரத்துக்கப்பாலிரு

* இஃது அன்னி பிலிப்பை மணம் புரிந்த பொழுது அடித்த மணமணி. இது தைவிகமாக இவனகத்துப் புலனாயிற் றென்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்து மென்மையாகச் செவிப்படுவது போன்று மிருந்தது. அவன் தனது வீட்டில் நடந்த காரிய மொன்றினையு மறிந்திலனேயாயினும், அவ னொருவா றுணருமாறாக அவனுடைய காதில் உதைத்தாற் போன்றிருந்தது. அம்மணியின் ஒலி சிறிது சிறிதாய்க் குறைந்து குறைந்து வந்து முற்று மற்றுப் போகவே, அவன் திடுக்குற்று விழித்துப் பசும் புற்றரையும், பட்சிசாலங்களும், நன்னீரூற்றுக்களும், பூஞ்செடிகளும், விருக்க வருக்கங்களு மாகிய வளங்கள்பல அழகோடு விளங்குதலிற் பேராநந் தங் கொடுக்கத்தரும் இயல்புடையதேயாய்த் தனக்குப் பெரும்பகையை விளைப்பதே யாயுள்ள இத்தீவிலே தான் வசித்திருக்குந் தன்மையை உள்ளவாறாக உணர்ந்த சமயத்து, அறிவுமாத்திரையானே தம்மைத் தியானித்து வழிபடும் மெய்யன்பர்களுள்ளக் கமலத்து விரைந்து சென்று, அன்னோரது கேவலத்தா லெய்துந் துயரத்தை யுடனே நீக்கியருளுமாறு நீக்கமற நிறைந்து எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருளை அவன் தியானியாதொழிற் திருப்பானேயாயிற், றனிமையினா லவன் படுந் துயரம் அவனைக் கொன்றேயன்றி வாளா விட்டொழியாதேயாம். முதிர்வய தெய்துமுன் இளமையிற்றானே மன வியசனத்தினாலே வெள்ளிய நரைமயிரையுடையோனாய், அநேகவருடங்களாக அவன் அங்கே வசித்திருக்கவே மாரியுங் கோடையும் மாறி மாறி வந்தன. அவன் தனித்திருக்குமாறு உற்றகதி சடுதியாக ஒரு முடிவுக்கு வருங் காலபரியந்தம் மனைமக்களை ஒரு காலத்தில் காணுவேனென்ற எண்ணமும், தன் நினைவை எஞ்ஞான்றும் விட்டகலாதிருந்த பழைய நிலம் புலங்களை யடைந்து ஆங்கேயினி நடந்து திரிவேனெனக் கொண்டிருக்கும் ஆசையும் அவன் மனத்தை விட்டகலவேயில்லை.

இங்ஙனமாக ஈனக்காடன் அத்தீவிலே சஞ்சரித்திருக்குங் காலத்தில் "நல்யோகபுரவி" என்னுங் கப்பலைப் போல எதிர் காற்றிலெடுபட்டுத், தான் சென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடைய நினைத்த இடத்துக்குப் போக வியலாது வழி தவறி ஒரு கப்பல் இத்தீவுக்குச் சமீபமான இடத்தே வந்தடைய, அக்கப்பற்காரர்கள் தாம் நிற்குமிட மெது வென்று தெரியாதவராய் அங்கே நங்கூரமிட்டனர். தண்ணீருக் கிங்கே யாதுசெய்வோ மென்று யோசித் திருக்கும்போது, உபமாலுமி, பனிப்புகையினிடையே விடியற்காலத்தே தோன்றும் வெளி வழியே மலையி லிருந்து சப்தமின்றிச் சொரியு மருவியைக் கண்ணுற் றுக், கலாசுக்காரரையனுப்ப, அவர்கள் கரையை யடைந்து பலவாறு பிரிந்து நன்னீருற்றையு மாற்றை யுந் தேடி இரைச்சலிட்டுக் கொண்டு சென்றனர்.

**ஒரு கப்பலைச் சந்தித்தல்**

அப்பொழுது, கடலையே நோக்கிக் கொண்டு மலைச் சிகரத் திருந்த ஈனக் என்பான், நீண்ட தாடியையும் நீண்ட மயிரையு முடையனாய்த் தனித்தவனாய்க் கறுத்த தோற்றத்தை யுடையனாய், மனுஷரூபந்தானோ என்று கண்டவர் சந்தேகிக்கப்படத்தக்கவனாய், இலை குழைகளா லமைந்த நூதன உடையுடையனாய், முணுமுணுத்து மினு மினுப்பவனாய், பொருளற்ற சொற்களைப் பேசுபவனாய், பேச்சுப்பாஷையை மறந்தான்போன்று இங்கிலீஷ் பேசமுடியாதவனாய், மிருகங்களைப் போலச் சத்த மிட்டுச் சைகை செய்து கொண்டு பைத்தியகாரன் போல மலையாலிறங்கி வந்தனன். அவன் செய்த குறிக ளவர்கட்குப் புலப்படாவாயின வாயினும், அவன் அவர் களை அமிர்தம்போன்ற நன்னீருறிப் பெருகும் நதிக் கரைக்கு நடாத்திச் சென்றனன். அக்கூட்டத்தாரோடு கலந்து அவரோடு நடமாடுந்தொறும், அவர்கள் பேசு வதைக் கேட்குந் தொறும், ஏழு வருடகாலமாகப் பேசாது கட்டுப்பட்டுக்கிடந்த நாப் பேசத்தக்க விதமா கச் சிறிது சிறிதிளகி வந்தது. கடைசியாக அவன் அவர்கட்குத் தன் காரியம் யாவையும் விளங்கச் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அவர்கள் தங்கள் பீப்பாக்களை நீரால் நிரப்பிக் கொண்டு அவனையுமக் கப்பலிலேற்றிச் சென்றனர். அவன் தனது சரித்திரத்தைக், கப்பலிலும் தடதடத்த பேச்சினாலே குறிப்புக் குறிப்பா யொருவாறு விளக்கினான். தொடக்கத்திலே அவன்மாட்டு அவர்கள் ஐயமுற்றனரேயாயினும், அவன் வார்த்தை, செல்லச்செல்ல அச்சம்பவங்களை முடிவுறக்கேட்ட யாவரையும் நம்பச் செய்ததேயன்றி அவர்கள் மனத்தையுங் கசிந்துருகுமாறு செய்தது. அவர்கள் அவனுக்கு வஸ்திரம் முதலிய உதவி இங்கிலாந்துக்குத் தங்கள் கப்பலில் கூலி பெறாதும் ஏற்றிச் சென்றார்கள். ஆனால், அவன் பன்முறையும் மற்றவர்களோடு கப்பலில் வேலை செய்து, தனிமையாயிருந்த பழக்கத்தை நீக்கிக் கொண்டான். இவன் இக்கப்பலில், தன்னுடைய தேசத்திலிருந்து வந்தோனாவது தன்னுடைய பாஷை பேசுவோனாவது ஒருவருமின்மையால், ஆவலோடு தானறியவேண்டிய காரியங்களை வினாவிய பொழுதும், அறிந்து கொள்ள இயலாதவனாயினான். அக்கப்பல் கடுங்காற்றில் போகக் கூடிய பெலமுடையது அன்மையால், பிரயாணம் தாமதமும் மிகச் சோர்வுமுடையதாயிருந்தது. வாயு வேகத்தினும் மனோவேகமே யதி கதியாய் விரைந்து செல்லு மாதலின், காற்றுக் கப்பலை இங்கிலாந்துக் கரைக்குக் கொண்டு செல்லுமுன்னரே, ஈனக்குடைய மனமானது விரைந்து சென்று இங்கிலாந்தையடைய, அங்கே பனித்துளியுள்ள பசும் புற்றரைகளிற் படிந்தும், கரையோரங்களிலுள்ள வெண்மலைகளிலடித்தும் தலைவிமாட்டு அன்புற்ற தலைவனினவாவைப் போன்று காலையில் வீசும் வாசனை யளாவிய இளந்தென்றலை, அவன் உள்ளவாறு சுவாசித்து உடம்புமுற்றும் செறியப் பெற்றது போல அவனுக்குத் தோன்றிற்று. (நெடுங்காலமாகப் பிரிந்திருந்த நாயகன் மீண்டுவந்து தன் நாயகியைக் காணுஞ் சமயத்து அவன்றன்மை யெவ்வாறாமோ அவ்வாறாகவே இங்கிலாந்தாகிய தன்தலைவியை ஈனக்காகிய தலைவன் காணும் பொழுது இருந்ததென்க.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்துக்கரைதெரிந்த அன்றுகாலையே அக்கப்பலிலுள்ளார் யாவரும் விருப்பத்தோடு தங்கட்குள் ஒரு வரி வைத்துப் பணஞ் சேர்த்துத் தனித்தவனாகிய அவனுக்கு இரங்கிக் கொடுத்தார்கள். பின்னர், இவன் முன்னர் நின்று புறப்பட்ட அக்கரையிலேயே இவனை இறக்கிவிட்டார்கள். அவனிறங்கிப் பிறரொருவரோடாவது ஒரு வார்த்தையும் பேசாது இல்லம் நோக்கிச் செல்கின்றான்—"வீடு!—என்ன வீடு!—எந்த வீடு!—எனக்கு வீடுண்டா?—என்று தன்னுட் பேசிக்கொண்டு தான் முன்னிருந்த வீட்டுக்கு நடந்து செல்கின்றான். அன்று சாயங்காலம் துறைமுகங்களாகவுள்ள மலைகளினிருந்து வெளிகட்கு மூடாகக் கடலினின்றும் பனிப்படலமொருண்டுவந்து அத்திசை முழுவதையும் மூடுமந்நேரம் வரையும் வெளிச்சமாயுங் குளிராயுமிருந்தது. அப்பனிப்படலம் அவனுக்கு முன்னே செல்லும் பெருந்தெருவை மறைத்ததேயாயினும், இடம் வலமாகிய இரு புறங்களினும் புற்றரை செய்கைத்தரை சோலையாகிய இவைகளின் சிறு பாகங்கள் அவன் கண்ணுக்குத் தெரிவனவாயின.

இலையை உதிர்த்திய வெறு மரத்திலிருந்து ஒரு றொபின் குருவியானது * துக்க கீதத்தைப் பாடியழுதது. மரத்திலிருந்து காய்ந்துள்ள இலைகள் யாவும் பனித்துளிகள் படிந்த பாரத்தால் கீழ் வீழ்ந்தன. பனித்துளிகளிறுகித் தடிக்கத் தடிக்க இறுகித் தடிப்பேறிய பின்னர், பனிப் புகைக் கூடாக ஒரு பெரு வெளிச்சம் வந்து அவன் மீது விழுந்தது. அவனுமவ் வெளிச்சம் வந்த வழிநோக்கிச் சென்றான். மற்றையோராற் கவனிக்கப்படாதவாறு தெரு வழியே கள்வனைப்போல

* மரமிலையுதிர்த்தி நின்றதும் றொபின் குருவி பாடியழுததும் இவன் பொருட்டு வருந்துவன போன்றிருந்தனவென்பது இங்கியர்கள் இவற்றைத் துர்ச்சகுனங்கள் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல நடந்து, பின்வரும் விபத்தை முன்னரே குறிகளாலறிந்து மனவருத்தத்தால் நிலத்தைப் பார்த்தகண்களையுடையனாய், தன் கண்மணிபோன்ற அன்னி தன்னை நேசித்து எழு வருடகாலமிருந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்து வாழ்ந்த மனையைச் சேர்ந்தான். அங்கே வெளிச்சமுங் காணான். ஒரு சத்தமுங் கேளான். கடனுக்காக இவ்வீடு விலைப்படப் போகின்றதென்று வெளியாக்குக் கடித மொட்டப் பட்டிருந்த தொன்றனையே பனித்துளிக் கூடாகக் கண்டான். பின்னர் அவன் இன்னுஞ் சிறிது தூரஞ் சென்று "யாவுந் தொலைந்தனவா! அன்னியும் பிள்ளைகளும் இறந்தனரா! அவர்கள் என்னை மறந்தனரா! அவர்க்கும் எனக்குமிடையேயுள்ள நேசத்தொடர் அறுந்தொழிந்ததா!" என்று தன்னுட் புலம்பிக்கொண்டு துறைமுகத்தும் ஒரு தடாகத்தும் சமீபமாகவுள்ள தான் அறிந்த சத்திரமொன்றினைத் தேடிச் சென்றனன். செல்லும் போது குறுக்கே மரங்களிட் டமைக்கப்பட்ட தலைவாயிலையுடைய அப்பழைய சத்திரம், தான் புறப்படு முன்னராகவே உட்கிக்கிடந்த தூண்கள் காலஞ் சென்றமையாலுங் கறையான் தின்றமையாலும் முன்னரேயே முரிந்து விழுந்தழிந்து போமென் றெண்ணினான். ஆயின் அஃதழியாதொழிய, அச்சத்திரக்காரனே யிறந்து விட்டான். அவனுடைய மனையாள் மிறியம் லேன் என்பாள், நாள் விகிதம் தன் வருவாய் குன்றி வந்ததேயாயினும், அச்சத்திர தருமத்தை விட்டு விடாது நடாத்திக் கொண்டு வந்தாள். முன்னொரு காலத்தில் கலகப்பிரியரான கப்பற் காரர்களின் இளைப்பாறு மிடமாயிருந்த அது, இப்பொழுது சப்த மொன்றுமின்றி, இன்னும் களைத்த பிரயாணிகட்கே களையாறு மிடமாயிருக்கின்றது. இவ்விடத்திலே ஈனக் பிறரறியாதவாறு நெடுநாளாக மறைந்திருந்தான். மிறியம் லேன் மிக்க அன்புள்ளவளும் அதிக கதைப்பிரிய முள்ளவளுமாதலால், அவனை அமைதியாயும் தனிமையாயும் அடங்கியிருக்க விடாதவளாய், இடையிடையே அவ்வூர்ப் பலகதைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு, நிறம் மங்கிக் கூனி மெலிந்து பெலங்கெட்டவனாயிருந்தமை நோக்கி இவனை ஈனக் கென்றறியாது அவன் வீட்டுக் குடும்பத்துச் சம்பவித்த எல்லாச்சமாசாரங்களையும் தவறாது சொல்லிவிட்டாள். அவை யாவன :—

அவனுடைய மூன்றாவது குழந்தையின் மரணம்; அன்னிக்கு வறுமையுற்றது, பிலிப்பு மற்றிரு பிள்ளைகளையும் பள்ளிக்கூடத்துக்கு வைத்தது, பள்ளிக்கூடச் செலவு முற்றும் கொடுத்துப் படிப்பித்து வந்தது, அவளை விவாகஞ் செய்ய அவன் நெடுங்காலமாக விரும்பியது, அவள் நெடுநாளாகப் பின்னர் சாக்குப்போக்குச் சொல்லிவந்து சம்மதித்தது, அதன் பின்னர் விவாகஞ் செய்தது, பிலிப்புக்கு ஒரு குழந்தை பிறந்தது, என்பனவாம்.

இவ்விதமாகச் சகல துயரங்களையும் துன்பத்தையும் வருவிக்கத்தக்க கதைகள் யாவையும் அவள் சொல்லச் சொல்ல சிறிதாவது துக்கக் குறியேனும், அசைவேனு மவன் முகத்துக் காணப்படவில்லை. அக்கதைகளைச் சொல்பவளாகிய அவட்குள்ள ஆத்திரந்தானும், கேட்டுக் கொண்டிருக்கும் அவனுக்கு இருந்ததாக அவன் முகத்துத் தோன்றவில்லை என்பதை அச்சமயத்துக் கண்கூடாகக் காண்பான். ஒருவனுளனேல் நன்றாக அறிந்திருப்பான். அவள், பாவம் ஈனக் ஆடன் கடலில் மாண்டுயிர் துறந்தான் என்று அவள் சொல்லிவந்த கதையை முடிக்கும்பொழுது, அவன் தன் நரைத்த தலையை ஆழ்ந்த துயரத்தோடசைத்து கடலில் மாண்டுயிர் துறந்தானா என்று வாய்க்குள் அவள் சொன்ன சொற்களைத் தானும் மெல்லச் சொல்லி, பின்னரும் வாய்க்குள் அவளுக்குக் கேளாமல், அதிக மாழ்ந்த துக்கத்தோடு உயிர்துறந்தானா என்று சொல்லிக்கொண்டான். ஆனால் ஈனக் அன்னியுடைய முகத்தையொரு முறை காண்பதற் காசைப்பட்டான். நாணவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய முகத்தை இன்னொருமுறை கண்டு அவளாநந்தத்தோடு கூடியுள்ளாளோ என்றறியப் பெறுவேனாயின் எனக்கு அதிக சந்தோஷ முண்டாகு மென்று எண்ணினான். இந்த எண்ணம் அவன் மனத்தை உருக்கி வருத்தியமையிற் கார்த்திகை மாசத்து ஒரு சாயங்காலத்து இருளதிகமதிகமாக மூடியிருந்த சமயத்துப் புறப்பட்டு அவளிருக்குங் குன்றை நோக்கிச் சென்றான். அதிலேயேறிக் கீழேயுள்ளவை யாவற்றையும் பார்த்துக்கொண்டு ஓரிடத்திலிருந்தான். அப்பொழுது பேசமுடியாத அவ்வள வதிகமான துயரத்தை வருவிக்கத்தக்க அளவிறந்த எண்ணங்கள் ஒருங்கு நெருங்கி ஞாபகத்துக்கு வந்தன. பின்னர்ச் சதுரச் சாளரவழியால், வசிப்போர்க்குச் சுகத்தைச் செய்யும் விளக்கின் செவ்வொளியானது, பிலிப்பின் வீட்டுப் பின்புறத் ததிகதூரத்துச் சுவாலித்து, தேசாந்தர கமனஞ் செய்தலின் அதிகதூரம் பறந்து களைத்த பறவையைத் தன்னெதிரே மதிமயக் கோடு வந்து வந்து உயிர் நீங்கும் வரையும் தன் மீது மோதியடிக்குமாறு ஒரு வெளிச்ச வீட்டின் விளக்கொளி போல, அவனை வசீகரித்துத் தனக்கணித்தா யிழுத்தது. தெரு நோக்கிய வாயிலையுடைய பிலிப்பின் வீடு கரை நின்று தரை நோக்குவார்க்குக் கடையெல்லையின் தலையில்லமாய்க் காணப்படுதலின் அவ்விளக்கொளி தடைப்படாது ஈனக்குக்கு நேரே பாய்ந்தது. அவ்வீட்டுப் பின்புறத்தே பேரழகார்ந்துள்ளதும், நடுவிலே முதிய பைந்தருவாகிய இரு விருக்கமொன் றிருக்கப்பெற்றுள்ளதும் வெளிப்புறத் தேகச் சிறிய வாயிலொன் றமைந்துள்ளதுமாகிச் சதுரவடிவமைந்த சிறிய பூங்காவொன்று சிறந்து பொலிந்து விளங்கியது. உலாப்போதற்காக இப்பூங்காவைச் சூழ்ந்து கடற்கரை மணலால் ஒரு தெரு அமைக்கப்பட்டிருந்தது. அதனை யிரண்டாகப் பிரித்தொரு தெரு குறுக்கே சென்றது. ஆனால் ஈனக் நடுவழியை ஒழித்து, இருமரத்தின் பின் மறைந்து. சுவாருகா னகர்ந்து அவ்விளக்கொளி வழியே சென்றான். அவன் தான் காணா தொழியின் மகிழ்ச்சி பயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல ஒரு காட்சியை யங்கே கண்டான். அப்பொழுது தானினி அனுபவித்தற்கு வேறென்றேனும் இதனினும் பார்க்க உண்டென்று சொல்ல முடியாததுயாம் உண்டாயிற்று. வெள்ளிக் கிண்ணங்கள் கரண்டிகள் முள்ளுகள் முதலியன, அழுத்தஞ் செய்யப்பட்ட மேசைமீது பளீர் பளீர் என விளங்கிக் கொண்டிருந்தன. அடுக்களை ஆநந்தமயமாயிருந்தது. அவளால் நாயகனாகத் தெரிந்து கொள்ளப்படாதுமுன் தள்ளப்பட்டுள்ளவனாகிய பிலிப்பு, இப்பொழுது நிடகாத்திரத் தோடும் மகிழ்ச்சியோடும் தன் குழந்தையை முழங்கான்மீது வைத்துக்கொண்டு அடுப்பின் வலப்புறத் திருந்தனன். ஒரு பெண் தன் சிறிய தந்தையாகிய பிலிப்பின் மேலே சாய்ந்து குனிந்து கொண்டு, ஒருபோது அன்னிலீதானுமோ என்று இந்த ஈனக் ஆடனும் ஐயப்படத்தக்கவளே யாயினும், வயசுக் குறைவாலும் உயர்ந்த தோற்றத்தாலும் தன் மகளென்றே கொள்ளத்தக்கவளும் அழகிய கூந்தலை யுடையளுமாகி, தனது நீட்டியகரத்தில் வளையங்கட்டிய நாடாவைத் தூங்கவிட்டு அக்குழந்தையை ஏய்த்து விளையாடிக் கொண்டு நின்றாள். அது, தனது கொழுத்துத் தசை முறுகிய கைகளை யுயர்த்தி யவ்வளையத்தைப் பிடிக்கப் பிடிக்கத் தவறித் தவறிப் போவதைக் கண்டு இருவரும் சிரித்து விளையாடிக்கொண் டாநந்தவசத்தராயிருந்தார்கள். இனி அவ்வடுப்பினிடப்புறத்தே, தாயானவள் தனதினிய குழந்தையை இன்புற்றுப் பன்முறையும் நோக்கித் தனக்கருகே உயர்ந்து பெலமுடையனாய் வளர்ந்து நிற்கும் தன்னருமை மகனை யிடையிடையே திரும்பிப்பார்த்து அவனுக்குப் பிரியமான வார்த்தைகள் சிலவற்றைச் சொல்லுவாள். அன்னி தன் மகற்கு யாது கூறினளென்பது ஈனக் ஆடனின் செவிப்பட்டிலதே யாயினும், அதனைச் செவிமடுத்த தன்னின் புதல்வனிடத்துப் பன்முறையு மினிது தோன்றும் புன்னகையினானே அன்னாள் பிரிய வசனமே கூறியுள்ளாள் என்றவனனுமானிக்கலாயினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வீட்டினுள்ளே தோன்றிய தோற்றம்.

[தான் முன்னிறந்தாருள் ஒருவன் என்றும், அவ்
விறந்த ஆவியே இவற்றை நின்று காண்கின்றதென்
றும் ஏனக் ஆடனை நினைக்குமாறு செய்தது.]

அவன் தனக்கினி மனையாளல்லாத தன்மனையாளை
யும், தனதல்லாத அவனுடைய குழந்தை தன்னுடைய
தந்தையின் முழந்தாளிலிருந்து விளையாடுவதையும்,
தான் குளிராலும் மனத்துயராலும் வருந்த அவர்கள்
அவ்வருத்தமுங் கிலேசமு மின்றிக் களிப் புடையராய்க்
கொண்டாடிக்கொண்டிருத்தலையும், உயர்ந்து வளர்ந்து
அழகமைந்திருக்கின்ற தன் பிள்ளைகளையும், தன்னுடைய
பொருள் முழுவதையும் தன் பொருளாக்கொண்டனு
பவிக்கும் பிலிப்பையும், அவனே தன்னுரிமைப் பொருள்
கட்கும், தன்பிள்ளைகளின் அன்புக்கும் உரியவனாக
இருத்தலையுங் கண்டான். காண்டலும் சகல சம்பவமும்
மிரியம்லேன் முன்னரே சொல்ல அறிந்துள்ளானாயினும்,
காதாற் கேட்டலினும் கண்ணாற் காண்டலே ஒருவ
னுள்ளத் துறுதியோ டூன்றி யழுந்து மாதலின், கிறு
கிறுத்து நடுநடுங்கித் தள்ளாடி விழப்புகுந்தான். ஒரு
மரக்கொம்பரைத் தாவிப் பற்றிக்கொண்டு மனவேதனை
யினால் பயங்கரமான சத்தத்தோடு கூவென்றலறிக்
குளறிவிட எண்ணினான் ஆயினும், நடுத்தீர்ப்பு நாளில்
இறந்தவர் யாவரையும் எழுந்து வருமாறு முழக்கும்
பேரிகையின் பேரொலிகேட் டுலகெல்லா மெவ்வாறு
பயப்படுமோ, அவ்வாறாகவே அடிப்படிக் கண் ஆநந்தத்
துடன் அளாவி விளையாடிக் கொண்டிருக்கும் அன்னி
யும் மற்றவர்களும் பயந்து நடுக்குறுவார்களே என்றும்
அதனால் அவர்களின் களிப்புஞ் சந்தோஷமு மழிந்து
விடுமே யென்றும் அஞ்சி இன்னா செய்தற் கொருப்
படானாய் அவ்வாறு செய்யா தொழிந்தான்.

ஏனக் தான் உயிரோடிருத்தலை உள்ளே யிருப்பவர்
கட்குக் காட்ட மன மொருப்படாதவனாய்க் கள்வனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல நடக்கும் பொழுது காலின் கீழ்க்கிடக்கும் பருக்கைக்கற்கள் சத்தமிடாதவாறு மெல்லென அடி தூக்கி வைத்து, மெய்சோர்ந்து அறிவழிந்தமையிற் றடக்குண்டு விழுந்து பிறர் கட்பொறிக்கு விடயமாகாதவாறு தனியே நடக்க முடியாதவனாய், மதிலை ஆதாரமாகப் பற்றிக் கொண்டு திரும்பி நகர்ந்து சென்று, வாயிலையடைந்து, கதவைத்திறந்து, வெளிப்புறத்தேகி, ஒரு நோயாளியின் அறைக் கதவைச் சார்த்துவதுபோல மெல்லச் சார்த்தி விட் டப்பாற் சென்றனன்.

அவன் பூங்காவினின்று நீங்கியவுடன், தோத்திரஞ் செய்யுமாறெண்ணி வலியிழந்தமையின் வழக்கம் போல முழந்தாளூன்றற் கியலாதவனாய்ச் சாட்டாங்கமாகப் பூமியில் முகம் குப்புற வீழ்ந்தான். மனத்துயர் சகித் தற்கரியதேயாகி மீக்கூர்தலின், தன் விரல்களை ஆதாரமாக ஈரநிலத் தாழ்த்திக் கொண்டு “ ஆ தேவனே, என்னால் தாங்க முடியாது ! இதற்காகவோ என்னை ஈண்டு கொடுவந்தீர் ! ஆ, சர்வவல்லமையுள்ள பிதாவே ! பரிசுத்த ரட்சகரே ! தனித்தீவிலே என்னைத் தாங்கிய கடவுளே ! என்னை யிப்பொழுது தாங்கி யருள்வீராக ! பிதாவே ! நான் தனித்தவன். என்னைக் காத்தருளுக ! அடியேற் குதவி புரிந்தருளுக ! இன்னும் நானுயிரோடிருக்கின்றேனென் றவளுக் கறிவியா திருக்குமாறு எனக்குப் போதிய பெலனை யீந்தருளுக ! அன்னியின் களிப்பையுஞ் சந்தோஷத்தையும் இடையேயில்லையாகச் செய்யாதவாறு எனக்குதவுவீராக. எனது பிள்ளைகளை நான் காணவேண்டாமா? என் னரிய பிள்ளைகளோடு நான் பேசவேண்டாமா? அவர்களோ என்னை யாரென அறியவு மாட்டார்கள் ! நான் நடக்கும் வகையால் ஒருவேளை என்னைக் காட்டிக்கொடுத்து விடுவேனோ ! ஒரு காலத்தும் நா னப்படிச் செய்யப்படாது. ஐயோ ! என்னை என் பிள்ளைகள் “ பப்பா ” என்று சொல்லி ஒருதரமாவது என்னுடைய முத்தங் கொடுத்திருக்க வில்லையே ! தனது தாயைப் போலுந் தோற்ற முள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மகளாவது நான் பெற்ற என்னருமை மகனாவது என்னை முத்தமிட்டிரார்களே!” என்று மனம் நொந்து கூறிக் கடவுளை மிகவுமிரந்து வேண்டினன்.

இத்தருணத்து பேச்சு மூச்சு முதலிய யாவுமின்றிச் சிறிது நேரம் அறிவு கெட்டுக் கிடந்தான். பின்னர் அறிவு தெளிந்தெழுந்து மெல்ல அடிபெயர்த்துத் தன் தனித்த வீடு நோக்கி நீண்டொடுங்கிய தெருவால் “அவளுக்குப் பேசப்படாது, அவளறியப்படாது” என்று ஒரு பதம் போல வாய்க்குள்ளே பாடிக் கொண்டு சென்றான். ஆயினும் ஈனக் ஆடன் சந்தோஷம் முற்று மற்றானல்லன்.

அவளுக்குப் பேசப்படாது அவள் அறியப்படாது என்ற தீர்மானம், துயர பாரத்தாற்றாழ்விடாது அவனை மிதத்தி, ஆழ்ந்த கடலினடியிலிருந்தெழும் நன்னீரூற்றுப் போல சித்தத்திலுள்ள வற்றாத ஊற்றிலிருந்தெழும் உறுதியான விசுவாச தோத்திரங்கள் அவனையின்னும் மோசங்களானாசமடைந்து போகாது துக்கசாகரவாழ்க்கையினின்றும் மீட்டுக்கொண்டுவந்தன.

(ஈனக்கின் துக்கசாகர வாழ்க்கை, உவர்க்கடற்கும் அவனகத்திருந் தெழும் தோத்திரம்; ஆழ்கடலினடியி னின்றெழும் நன்னீரூற்றுக்கும் சகித்தற்கரிய துயரங்கட்கெலாம்

நிலைக்களமாயுள்ள இப்பிரபஞ்சத்தை நீத்துக் கடவுளிடத்தவன் செய்யுந் தோத்திரஞ் சொல்லுதல் } ஊற்றுநீர் கடனீர்ப் பரப்புக்கு வருவதற்கு

உவமானமாயின வென்க,

அவன் மிரியம் லேனை நோக்கி” நீ கூறிய இந்தத் திரிகையந்திரக்காரனுடைய மனைவி தனது முதற்கணவனிப்பொழுதும் உயிரோடிருக்கின்றான் என்றறிவளேயாயிற் பயப்படமாட்டாளா என்று கேட்க, அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிறியம்லேன், ஐயோ அப்பா மெத்தப்பயப்படுவாள்
என்று கூறி, அவனிறந்து விட்டானென்ப துனக்குத்
தெரியும் என்று நீ சொன்னால் அது அவளுடைய மன
சுக்கு மெத்த ஆறுதலாயிருக்கும் என்றும் கூறினாள்.

அதனைக் கேட்ட ஈனக் ஆடன் நான் செத்த பின்
னர் தான், அவ்வாறுதலவளுக்குக் கிடைக்கும். அவர்
எனக்கு நியமித்த காலத்தைக் காத்திருக்கின்றேன்,
எனத் தன்னுள்ளே தானே சொல்லிக் கொண்டு " ஏற்ப
திகழ்ச்சியென் றெண்ணித் தன் சீவனத்துக்காகப் பொ
ருள் சம்பாதிக்கத் தொடங்கினான். அவன் பீப்பா முத
லியன செய்தல், தச்சுவேலை செய்தல், செம்பட வருக்
கின்றியமையாது வேண்டிய மீன்பிடி வலை பின்னுதல்,
வியாபார முயற்சி தொடங்குங் காலங்களிலே சிறுத்
தொகையான வியாபாரப் பொருள்களை ஏற்றிச் செல்
லும் பெருங் கப்பல்களுக்கு ஏற்றுதல் இறக்குதற் குதவி
புரிதல் ஆகிய இங்ஙனமாய பல்வகைத் தொழில்களிலும்
கைதேர்ந்தவனாதலின் ஒருவாறு தான் ஒறுத்துச்
சீவனஞ் செய்யக் கூடிய தொகையைச் சம்பாதித்துவந்
தான். ஒரு தொழிலைப் புரியு மொருவனுக்கு அத்
தொழிலாற் சுற்றத்தார் முதலிய பிறர் பலனடைவார்
என்னுந் திடம் உண்டாயினன்றே அவனத் தொழிலைப்
பாடுபட்டு வருந்திச் செய்யும் பொழுதும் சந்தோஷத்
தோடு செய்வான். ஈனக் ஆடன் தனக்காக மாத்திரமே
தொழில் புரிந்தான். அவனூதியத்தை யனுபவித்தற்கு
இவ்வுலகிலொரு பிராணியுங் கிடையாது. ஆதலாலவன்
வெறுப்போடன்றே தொழில் புரிந்து வந்தான். சீவ
னைப் பேணிக்கொள்ள இன்றியமையாது வேண்டப்
படுவது, தான் செய்யுந் தொழிலைச் சந்தோஷத்தோடும்
விருப்பத்தோடும் செய்தலேயாதலின் அவன் நீடித்த
காலத்துக்கு இருக்க இயலாதவனாயினான். அவனு
மங்கே வந்து வருட மொன்றாகிக்கழிந்து இரண்டாவது
வருடந் தொடங்க, மனச்சோர்வும் தேக மெலிவும்
பெலவீனமு முண்டாகி வெளியே சென்று தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியாதவனுமாகி வீட்டிலே தங்கினான். பின் சிலநாளிலே அந்நோயானது வீட்டிலேயு மெழுந்துலாவித்திரிய முடியாதவாறிருத்தி விட்டது. அதன் பின்னதுவு முடியாது படுக்கச் செய்துவிட்டது. ஆனால் ஈனக் ஆடன் தனது துன்பத்தைச் சந்தோஷமாகச் சகித்துக் கொண்டான். ஒரு கப்பல் மலையிலடித்துடையக் கப்பற்காரர் தப்பிக்கொள்ளும் நம்பிக்கையையிழந்து வருந்துஞ் சமயத்துச் சூறைக் காற்று வந்தடித்தொழியப் பின்னர்ப் புயன் மேகங் கடலினின்றுங் கிளம்ப அதற் கூடாக சீவரட்சா வோடமொன்று தங்களை மீட்கவருதலைக் கண்டு அவர்கள் நிரம்பிய சந்தோஷத்தோடிருத்தல் போல, ஈனக் ஆடன் தன் சீவியமாகிய கப்பல், துயரப் புயலா லலைந்து, அல்லல் மலையில் அடிபட்டுடைந்து, தத்தளிக்கும் போது மரணமாகிய சீவரட்சா ஓடம் வருதலைக் கண்டு அதி சந்தோஷத்தோடு பார்த்தான். அவனுடைய துன்பத்தை நிராகரித்து விடும் மரணகாலம் பிறந்த மாத்திரத்து மிக்க ஆறுதலான நம்பிக்கை அவனிடத் துண்டாயது. உலகத்திலிருந்து தானனுபவித்த துயரங்கள் யாவும், மரணம் வர மறைந்தொழிந்து விடும் என்று எண்ணிய மாத்திரத்தே அவனகத் தானந்த முதித்தது. "என்னுயிர் நீங்குமந்தக்ஷணம் வரையும் நான் அவளை நேசித்தேன் என்று நானிறந்தபின் அவளறிவாளாக" என்றெண்ணிக் கொண்டு, பிரியம் வேலை யழைத்து அம்மா நானோர் இரகசியம் வைத்திருக்கின்றேன். நான் அதனை உனக்குச் சொல்லுதற்குமுன் "நீ, இறக்கும் வரையும் அதனை ஒருவருக்குஞ் சொல்லமாட்டேனென்று இவ்விவிலிய நூலைக் கொண்டு சத்தியஞ் செய்" யென்றான். என்ன மரணக்கதை பேசுகின்றீர், என்று அந்த நல்ல கிழவி, நீர் இறக்கமாட்டீர். சீக்கிரஞ் சுகமடைவீரென்று திட வார்த்தை கூறினாள். ஈனக் பின்னரு முத்தசத்தத்தோடு விவிலிய நூலைக்கொண்டு சத்தியஞ் செய்யென்று கூறப் பாதிப் பயத்தோடு புத்தகத்தைத் தொட்டுச் சத்தியஞ் செய்தாள். பின் ஈனக் பஞ்சடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களையுருட்டி யவளைப்பார்த்து இப்பட்டணத்து ஈனக்
ஆடனை நீ யறிவாயா? என்றான். அவள் "அறிவாயா
அன்றோ கேட்கின்றீர். அவனை யான் அதிகதூரம்
அறிவேன். ஏ! அவன் தெருவால் வருதல் போதலைக்
கவனித்திருக்கின்றேன். அவன் நிமிர்ந்த தலையன்.
பிறரொருவரையும் பொருட்படுத்தாதவன்" என்றாள்.
ஈனக் மென்மையாகத் துக்கத்தோடு அவளைப் பார்த்து
அவனுடைய நிமிர்ந்த தலை குனிந்துவிட்டது. இப்
பொழுதவனை யொருவரும் பொருட்படுத்தார்கள்.
யானே யவ் வீனக் காடன். யானின்னும் மூன்று
நாளைக்குத்தானும் உயிரோடிருக்க மாட்டேன்" என்று
மெல்லக் கூறினான்.

உடனே கிழவி யதனை நம்பியது பாதியும் நம்பாதது
பாதியுமாக ஆத்திரமிகையால் பைத்தியகாரி போலக்
கத்திவிட்டாள். "நீரா ஈனக் ஆடன்? நீர்தானா?
இல்லை! இல்லை! ஒருகாலத்துமில்லை. உண்மையாக
அவனும்மிலும் ஓரடி உயர்ந்துள்ளவன்" என்றாள்.
ஈனக் பின்னரும் அவளைப்பார்த்துக் "கடவுள் என்னைக்
குறைத்து நானிப்பொழு திருக்கும் இந்தநிலைக்குக்
கொண்டுவந்து விட்டார். வியாகுலமுந் தனிமையுமே
யென்னை யிவ்வாறாகச் செய்தது. இன்னும் நான்தான்
"அன்னி ஆடன்" என்றும் "அன்னிறே" என்றும்
இரு முறை பெயர்மாறின அவளை விவாகஞ் செய்தவ
னென்றும் அறிவாயாக. இப்பொழுது பிலிப்பை
மணந்திருக்குமவளை நானே முன் மணந்திருந்தேன்.
* எழும்பாதே. உட்காரு. கவனமாகக் கேள் என்று
தனது பிரயாணம், கப்பலுடைந்தது, திரும்பித் தன்
னூர் வந்து சேர்ந்தது, அன்னியைச் சாளரவழியா
லுற்று நோக்கியது, தான் தீர்மானித்தது, அத்தீர்மா
னத்தைப் பாதுகாத்து நிறைவேற்றியது, ஆகிய இவை

* இவ்வளவுங் கூறியவுடன் கிழவி அன்னிக்கும் பிள்ளை
கட்கும் போய் அறிவிக்கும் நோக்கமாக எழுந்தனள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை யெல்லாம் விபரமாகக் கூறினான். இவைகளைக் கேட்டவுடன் கிழவிக்கும் கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. ஆனா லவள் உடனே வெளியே புறப்பட்டோடித் துறைமுகத்தைச் சுற்றி, எவர்க்கும் ஈனக் ஆடன் வரவையும் அவனது துயரையும் பகிரங்கப் படுத்துமாறு துரிதப்பட்டும், தான் முன் செய்து கொடுத்த சத்தியத்தைப் பங்கஞ் செய்யப் பயந்தமையால் தடையுற் றிருந்தனள். நீரிவ்வுலக வாழ்வை யொருவுதன்முன் உமது பிள்ளைகளைக் கண்டு கொள்ளவேண்டும். ஓய் ஆடனே! நான் போய்ப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வரலாமா என்று கூற, அவ னவள் கூறிய சொற்களைக் குறித்துச் சிறிது நேரமாகச் சிந்தித்துக்கொண்டு பேசாதிருந்தமையி னஃது அவனுக்குச் சம்மதமா மென்றெண்ணி அவள் குழந்தைகளைக் கொண்டுவருமாறு செல்ல எழுந்தாள். அவன் அம்மே! எனது கடைசி நேரத்து என்னைச் சங்கடப்படுத்தாதே. நானிறக்கும் வரையும் என் னெண்ணம் நிறை வேறுவதாக. இரு, இரு. பேசத்தக்கதாயிருக்கும் பொழுதே யான் சொல்லுவதைக் கவனித்துக் கேட்டு விளங்கிக் கொள்ளுதி. சக்தியற்றேனாயின் ஒன்றுஞ் செய்ய முடியாது. இனி நீ அவளைக் கண்டால் நானவளுக்குச் சோபனஞ் சொல்லி யிறந்தேன் என்றும், அவளைக் காத்துக் கொள்ளுமாறு கடவுளைப் பிரார்த்தித்தேன் என்றும், அவளை நேசித்து அவள் மாட்டு அன்புவைத் திறந்தேன் என்றும் அவட்குச் சொல்லுவா றுன்னை வற்புறுத்தி வேண்டுகின்றேன். என்னையும் அவளையும் பிரித்த பிணிப்பை (மணம் புரிந்த) பிரிவில்லாவிட்டால் நானுமவளுங் கணவனும் மனைவியுமாக இருந்த அக்காலத்துப்போல இக்காலத்தும் நான் அவள் மீது அன்பு வைத்திருப்பேன். இப்பொழுதவள் இன்னொருவனுடைய மனையாளாயிருத்தலின் என்னன்பை முன்போலப் புறக்கிரியைகளாற் காட்டல் சன்மார்க்கத்துக்கு மாறாயிருக்குமே. தனது தாயின் பிரதிரூபமாகத் தோன்றிய எனது மகள் அன்னி என்பாளை இரட்சிக்குமாறு கடவுளைத் தோத்திரஞ் செய்தலே, எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி வாக்காமென்று சொல்லுக. எனது மகனுக்கும் நானவனை யாசீர்வதித்தே யிறந்தேன் என்று சொல்லுக. பிலிப்புவுக்கும் நானவனையும் ஆசீர்வதித்தேனென்றும், அவன் எங்கட்கு நன்மையே யன்றிப் பிறிதொன்றையேனும் நினைக்கவுமில்லை யென்றுஞ் சொன்னேனென்றுஞ் சொல்லுக. நானிவ்வளவுகாலமும் உயிரோடிருந்தேன் என்பதனையறியாத எனது பிள்ளைகள் எனது பிரேதத்தை விரும்பினால் வந்துகாணலாம். நானே அவர்களுடையபிதா. இறந்த எனது முகத்தோற்றம் அன்னியினது பிற்காலத்தில் அவளை வாதித்து வருத்துமாதலின், அவன் மாத்திரம் வந்து என்னைக் காணலாகாது. நானினிப் போகு முலகில், எனதுறவினரெல்லாருள்ளும், என்னை வந்தனத்தோடு ஏற்றுத் தழுவி யுபசாரஞ் செய்யுமாறு காத்துக்கொண் டொருவனிப்பொழுது இருக்கின்றான். இந்த மயிர்ச்சுருள் அந்தப்பிள்ளையுடையதே. இதனை என் மனையாள் நறுக்கி நான் பிரயாணப்படும் பொழுது கொடுத்தாள். இதனை இத்துணைக் காலமாகப் பாதுகாத்து என்னோடு கொண்டு திரிந்தேன். இதனை எனது தகனக்குழிக்கு என்னோடு கொண்டு போமாறு கருதியிருந்தேன். ஆனாலிப்பொழுது என்மனம் மாறிவிட்டது. "நான் என் குழந்தையைக் காணுவேன். அஃதங்கே ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும். ஆதலால் நானங்கே போனபின் இந்தா இதனை என் மனையாட்குக்கொடு. இஃ தவட் காறுதலைக் கொடுக்கும். அஃதன்றி நான்தான் ஈனக் ஆடன் என்பதனையு முறுதிப்படுத்தும்" என்றான். அவன் தன் கடைசி வார்த்தையைச் சொல்லி முடித்தவுடன் மிறியலேன் அவன் தனக்குக் கற்பித்தவாறு தவறாது செய்து முடிப்பேன் என்று வாக்குத்தானஞ் செய்து பன்முறையாக உறுதி மொழி கூறினாள். பின்னரும் அவன் ஒருமுறை தன் கண்களை யுருட்டி அவளைப் பார்த்துத் தான் விரும்பிய யாவையும் பின்னரு மொருமுறை கூறி முடிக்க அப்பொழுது மவள் முன்போல வாக்குத்தானஞ் செய்துறுதி கூறினாள். பின்னர் மூன்று நாளிரவு அசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்று அமைதியாக ஈனக் சயனித்துக் கிடந்த பொழுது மிரியம்லேன் தான் நித்திரையின்றிப் பக்கத்தேயிருந்து இடைநேரங்களிலே சிறிது கண்படை கொண்டு பின் விழித்துக் கவனித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது சமுத்திரமானது முழங்கிப்புறமீக் கட்டு விட்டுப் பெருக்கெடுத்து வந்தமையால் துறைமுகத்துள்ள வீடுகள் யாவும் நடுநடுங்கின. அவன் விழித்தெழுந்து தன் கையிரண்டையும் நீட்டி உயர்த்திக் கொண்டு ஒரு கப்பல் ஒரு கப்பல் என்று சப்தமிட்டு "நான் ரட்சிக்கப்பட்டேன்" என்று கூச்சலிட்டுக் கொண்டு பாயலின் மீது வீழ்ந்தான். அத்துணையோடு அவனுடைய பேச்சொழிந்து முடிந்தது.

உலகத்துக் கெல்லாஞ் சன்மார்க்கத்துக்கோர் எடுத்துக் காட்டாய் நித்திரனாய் விளங்கிய ஈனக் ஆடனுடைய ஆன்மாவானது இங்ஙனமாய பேறுபுதக் குறிகளோடு அவனதுடம்பினின்று நீங்கி விரைந்து மறைந்தேகியது. அவனை அவர்கள் அடக்கஞ் செய்த பொழுது அத்துறைமுகமானது ஒருக்காலத்துங் காணா சனக் குழாத்தையும் பிரேத தகன கொண்டாட்டத்தையுங் கண்டு பெருமையடைந்தது.

ஈனக் ஆடன்

முற்றிற்று

UNIVERSITY COL...
LIBRARY
4- APR 1940
CEYLON

Printed by B. Santiagoepillai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Y OF CEYL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No.................

Acc. No.................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
19 OCT 1970
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org